Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது · பாதுகாப்பானது · நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone Sn, 259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். T.P: 021 222 7835 Fax:021 222 7836
பலநோக்கு கூ.ச. முன்பாக 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் T.P: 021 222 7560 Fax:021 222 7310
E.mail:thirumurugan5@lycosmail.com

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 17 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 19 (02.12.2004) வியாழக்கிழமை இதழ்:63

# புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் கொடுத்தால் ஆயுதக்கிளர்ச்சி வெடிக்கும் என்கிறது ஜே.வி.பி.!

(கொழும்பு)

தமது எதிர்ப்பையும் மீறி – விடுதலைப் புலி களால் கையளிக்கப் பட்ட இடைக்கால நிர்வாக அதிகாரசபை வரைபினை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்குமே யானால் தென்பகுதி இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலை உருவாகும் என்று ஆளும் கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் ஜே.வி.பி. கடுமை யான எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக் கால தன்னாட்சி அதிகாரசபை வரைபை ஏற்று காலத்தை இழுத் தடிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறும் அரசு தொடர்ந்து காலத்தைக் கடத்தினால் தாம் சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் மாவீரர் நாள் உரையில் கடுமையாக எச்சரித்திருந்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை படுபயங்கரமான அழுத் தத்துக்குள் சிக்கியிருப்பதாகவும் நிலைமையைச் சமாளிக்க பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்குமாறும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல்ட்ரொன் புறூவ் ஹொவ்டே அபாய அறிவிப்பை விடுத்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை லிங்க நகரில் தமிழரைத் தாக்க முயற்சி!

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழர்களின் குடியிருப்புப் பகுதியான லிங்கநகருக்குள் நேற்றிரவு 10.45 மணியளவில் சுமார் 25 இற்கும் மேற்பட்ட சிங்களவர்கள் கத்திகள், பொல்லுகள் சகிதம் உட்புகுந்து தமிழர்களையும் அவர்களது உடைமைகளையும் தாக்க முற்பட்டுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதியில் நின்ற தமிழ் இளைஞர்கள் அவர்களை தடுத்த வேளை அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் சிங்கவர்களைத் தாக்கி விரட்டியடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு பதற்றம் நிலவும் காரணத்தால் லிங்கநகரில் வாழும் தமிழர்கள் லிங்கநகரிலுள்ள யூதாதேயு கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் தஞ்சமடைந்துள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இடைக்கால நிர்வாக யோசனைப்படி

# புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறதாம்!

## அரசாங்க தகவல் திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாராகவிருப்பதாகவும் –

இது தொடர்பாக நோர்வேத் தரப்பூடாக விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ள அரசாங்கம் – நிபந்தனையற்ற பேச்சுக்கு வருமாறு புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்த அழைப்பை நிராகரிப்பதாகவும் தெரிவித்தது.

இது தொடர்பாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் மேலும்

போர்நிறுத்தத்தைக் காப்பாற்ற அரசு உரியமுறையில் செயற்படுகிறது. போர்நிறுத்த மீறல் காரணமாக சாதாரண பொதுமக்கள் மத்தியில் அச்சமும் முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. இதனை நீக்க இனங்களிடையே சம

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு புறநகர் பகுதியில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

கொழும்பு நகருக்கு அண்மையிலுள்ள தலங்கம என்ற இடத்தில் - நேற்றுமுன்தினம் இரவு தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தலங்கம றொபேட் குணவர்த்தன மாவத்தையில் - வீதியில் வைத்தே இந்த இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட இளைஞர் அசோகா பிரேமசீலன் என இனங்காணப்பட்டுள்ளார். இவர் சிலாபத்தில் வசித்து வந்தவரென்றும் அண்மையிலேயே தொழில் நிமித்தமாக தலங்கமவுக்கு வந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்னொரு நபருடன் வீதியில் உரையாடிக் கொண்டிருந்தபோது - வெள்ளை நிறக் காரில் வந்தவர்களே இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞர் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவரா என்பது குறித்து தாம் விசாரணை செய்துவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை வானொலி செய்திக்கு விடுதலைப் புலிகள் மறுப்பு!

யாழ்ப்பாணம் - குருநகர், திருநகர் பகுதிகளில் பொதுமக்களை விடுதலைப் புலிகள் தாக்கியதாக இலங்கை வானொலி தேசிய சேவையில் நேற்றுக்காலை வெளியான செய்திக்கு விடுதலைப் புலிக்ளின் யாழ்.மாவட்ட அரசியற்துறை மறுப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கை வானொலி தேசிய சேவையில் வெளியான செய்தி குறித்து யாழ்.மாவட்ட அரசியற்துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

குருநகர், திருநகர் பகுதிகளில் பொதுமக்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கியதாகவும், 15 வீடுகளைத் தீயிட்டு எரித்ததாகவும் - இலங்கை வானொலி தேசிய சேவையில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது.

இலங்கை அரச வானொலி இவ்வாறான அவதூறுப் பிரசாரத்தை மேற்கொள்வதை வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை அரச வானொலி வெளியிட்ட இந்தச் செய்தி தொடர்பாக யாழ்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தென்மராட்சி - நுணாவிலில்

## வாள்வெட்டுக்கு இலக்காகி காயமுற்ற சிப்பாய் மரணம்!

(கொழும்பு)

நுணாவில் பகுதியில் கடந்தவாரம் இனந்தெரியாதோரின் வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் நேற்றுமுன்தினம் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நுணாவில் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு 7:30 மணியளவில் வீதியால் சென்றுகொண்டிருந்த - இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இரண்டு படையினர் வாள்வெட்டுக்கு இலக்காகியிருந்தனர்.

இவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஒருவரான குருநாகல், சிலம்பல கஸ்வெவவைச் சேர்ந்த லான்ஸ் கோப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் அராலியில் இளைஞர் பலி!

அராலியிலிருந்து சங்கரத்தைக்கு குழை ஏற்றிச்சென்ற டிராக்ரருடன் சங்கரத்தையிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் நேருக்குநேர் மோதியதில் மோட்டார் சைக்கிளை செலுத்திவந்த இளைஞன் அந்த இடத்திலேயே, பலியானார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சங்கரத்தை - குளத்தடியைச் சேர்ந்த ஜெயபாலன் கஜேந்திரன் (வயது 20) என்பவரே பலியானவராவார்.

தனியார் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றில் பணிபுரிந்து வரும் இந்த இளைஞன் யாழ்நகரில் நடைபெற்ற மோட்டார் சைக்கிளுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் பரீட்சைக்குச் செல்லும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

துணைவிச் சந்திக்கு அருகில் ஒரு வளைவில் திரும்போது எதிரே வந்த உழவு இயந்திரத்துடன் மோதுண்டு, அருகிலுள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் இன்று வன்னி விஜயம்

(கொழும்பு)

நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்த விருப்பதாகத் தெரியவருகிறது.

வழமையான சந்திப்பே இந்தச் சந்திப்பு எனத் தெரிவிக்கப்பட்டபோதும் விடுதலைப் புலிகளின் தலைவரது மாவீரர் நாள் உரையினையடுத்து இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பு முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## சிறிமானி அத்துலத்முதலி புற்றுநோயால் உயிரிழப்பு!

(கொழும்பு)

போக்குவரத்து, சுற்றாடல் மற்றும் மகளிர் வ்விவகார முன்னாள் அமைச்சரும், முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் பாரியாருமான சிறிமானி அத்துலத் முதலி நேற்று கொழும்பில் உயிரிழந்தார்.

புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருந்த இவர் கடந்த ஒரு சில வாரங்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததார். நேற்றுக் காலை 6.30 மணிக்கு தனியார் மருத்துவமனை ஒன்றில் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இறக்கும்போது அவருக்கு 58 வயதாகும். முன்னாள் அமைச்சரான இவர் தனது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சிப் பகுதியின் அபிவிருத்திக்கு 11 இலட்சத்து 35 ஆயிரம் நிதி ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வடமராட்சிப் பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தனது நிதியிலிருந்து 11 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

வல்வெட்டித்துறை நெற்கொழு பொது அரங்கைத் திருத்தம் செய்வதற்கு இரண்டு லட்சம் ரூபாவும், வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும், அல்வாய் பொது விளையாட்டு மைதானத்தைத் திருத்தம் செய்வதற்கு ஒரு இலட்சம் ரூபாவும், கெருடாவில் அம்பிகை முன்பள்ளி நிலையத்திற்கு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு 13 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை உதைபந்தாட்டக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவிற்கு 50 ஆயிரம் ரூபாவும், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்திற்கு கணினிக் கொள்வனவிற்கு 2 இலட்சத்து பத்தாயிரம் ரூபாவும், பருத்தித்துறை சென்தோமஸ் நூல் நிலையத்திற்கு புத்தகங்கள் வாங்குவதற்கு 25 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை சாரதா நூல் நிலையத்திற்கு கட்டடம் அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும், பருத்தித்துறை திருவள்ளுவர் சன சமூகநிலையத்திற்கு புத்தகம் கொள்வனவு செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானததிற்கு சுற்று மதில் அமைக்க 30 ஆயிரம் ரூபாவும், சாரதா முன்பள்ளி நிலைய மூலவள நிலையத்திற்கு கட்டடம் அமைக்க 3 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (14)

## நினைவுதினக் கருத்தரங்கு

பேராசிரியர் கைலாசபதி நினைவு தினக்கருத்தரங்கு நாளை மறுதினம் பி.ப. 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'சமகால இலக்கியமும் விடுதலைப் போராட்டமும் எனும் தலைப்பில் பேராசிரியர் சி.சிவசேகரமும், ஈழத்து இலக்கியத்தில் கைலாசபதியின் பங்களிப்பு எனும் தலைப்பில் கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்துவர். இந் நிகழ்வில் கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தேசிய கலை இலக்கிய பேரவையினர் கேட்டுள்ளனர்.



கொக்குவில் சரஸ்வதி முன்பள்ளியின் கண்காட்சியில் கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் பத்மநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், முன்பள்ளி ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

# அரசாங்க அறிவித்தல்

**யாழ்ப்பாண மாவட்டத்தில் செய்யப்படவுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைகளுக்கான கட்டட வரைபடம் தயாரிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட கட்டடக் கலைஞர் அல்லது ஒன்றியம் அல்லது நிறுவனம் போன்றவற்றிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. யாழ்ப்பாண கச்சேரியின் பழைய பூங்காவை தாவரவியல் பூங்காவாக புனரமைத்தல்

   *வருங்கால அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு கட்டட வரைபடம் தயாரித்தல்*

2. நல்லூர் பிரதேசசெயலகக் கட்டடம்

   *நல்லூர் தமிழ் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட இரண்டு கட்டடம் அமைத்தல்.*

3. யாழ்ப்பாண கலாச்சார மண்டபம் அமைத்தல்.

   *யாழ்ப்பாண பொது நூலகக் கட்டடத்திற்கு அமைவாக தமிழ்க் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டட வரைபடம் தயாரித்தல்.*

   *விபரமான கட்டட வரைபடம், பொறியியல் சார்பான வரைபடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**யாழ்மாவட்ட செயலக புனர்வாழ்வு திட்டப்பணிப்பாளரை கந்தோர் நாட்களில் சந்தித்து மேலும் விபரங்களையும், கட்டடம் சம்பந்தமான விபரங்களையும் சம்பந்தப்பட்ட கட்டடக் கலைஞர் அல்லது ஒன்றியம் அல்லது நிறுவனம் பெற்றுக்கொள்ளலாம். ஆரம்ப அடிப்படை வரைபடத்துடன் தமது கேள்விகளை 2004 டிசெம்பர் மாதம் 31ம் திகதி அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.**

செ.பத்மநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.
01.12.2004.

(C/3418)

## நாற்பதாவது ஆண்டு நிறைவு விழா

(சுதுமலை)

திருமறைக் கலாமன்ற தினமும், 40ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நாளை மாலை 5 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில்திருப்பலி ஒப்புக் கொடுப்பதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற வுள்ளதாக மன்றப் பிரதிநிதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் தெரிவித்தார். (91)

## விபத்தில் சிறுவன் காயம்

மட்டுவில் முத்துமாரியம்மன் கோவிலடியில் வீதியைக் கடக்க முற்பட்டவேளை மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுவன் ஒருவன் காயமடைந்தான். இந்தசிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த த.பிரசன்னா (வயது - 9) என்ற சிறுவனே காயமடைந்தவனாவான். (29)

## ஆன்மீகச் சொற்பொழிவு

தொண்டைமனாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆசிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத்தொடரில் நாளை முற்பகல் 10.30 மணியளவில் 'திருவாசகம் என்னும் தேன்' என்ற தலைப்பில் சொற்பொழிவினை மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் நிகழ்த்துவார்.

இதற்கான அறிமுகவுரையை பேரவை உறுப்பினர் சி.நாகலிங்கம் நிகழ்த்துவார். (14)

## ஆசிரியர்களுக்கான தொடருறு கல்விச் செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களுக்கான தொடருறு கல்விச் செயலமர்வு நாளை வரணி ஆசிரியமத்திய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் மாணவர்களுக்கான நவீனகற்பித்தல், கற்றல் நுட்பங்களும் தொடர்பாடல் விருத்தியும் ஆகிய கருப்பொருள் தொடர்பாகச் செயலமர்வு நடைபெற்றவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் ஒரு ஆசிரியரை மட்டும் இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் க.செல்வராசா தெரிவித்தார். (29)


நிறஞ்சனாஸ் சங்கானை
30.11.2004 முதல்
சூர்யா (2 வேடம்), ஜோதிகா நடித்த
பேரழகன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
VANHELSING (றகுல படம்)
(சி-2723)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
இன்று மட்டும் (குளிரூட்டப்பட்டது)
தனுஷ், பிரியா நடித்த ட்ரீம்ஸ் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30.2.30. 6.30 (பு.நே)
நாளை முதல் அஜித், சிநேகா நடித்த
ஜனா
தினசரி இரவு 9.00 (பு.நே)
RAMBO - 3 தாக்குதல் நிறைந்த படம்
(சி-3319)

ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேநாள் வெளியீடான
அஜித் இரு வேடங்களில்
பூஜா நடித்த





அட்டகாசம் (ரீல்ஸ்)
பு.நே. 10.30, 2.30, 6.30
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான
R.B.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல்
நடித்த





சத்ரபதி
கா.நே. 11.00, 2.00, 7.00, 10.00


# முகாமைத்துவ போட்டியில் தெரிவான உள்ளூராட்சி மன்றங்களின் முடிவுகள்

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றுக்கிடையே நடாத்திய முகாமைத்துவப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாநகரசபைகளுக்கிடையிலான போட்டியில் - முதலாமிடத்தை மட்டக்களப்பு மாநகரசபையும், இரண்டாமிடத்தை யாழ்.மாநகரசபையும், மூன்றாமிடத்தை கல்முனை மாநகரசபையும் பெற்றுள்ளன.

நகரசபைகளுக்கு இடையிலான போட்டியில் முதலாமிடத்தை வவுனியா நகரசபையும், இரண்டாமிடத்தை சாவகச்சேரி நகரசபையும், மூன்றாமிடத்தை வல்வெட்டித்துறை நகரசபையும் பெற்றுள்ளன.

பிரதேச சபைகளுக்கிடையிலான போட்டியில் முதலாமிடத்தை வலிகாமம் தெற்கு பிரதேசசபையும், இரண்டாமிடத்தை திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையும், மூன்றாமிடத்தை வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையும் பெற்றுள்ளன. (29)

# தமிழீழ சுகாதாரசேவை நடாத்தும் எய்ட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

சர்வதேச எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு தமிழீழ சுகாதார சேவை யாழ்ப்பாணத்தில் ஒருங்கி ணைநத எய்ட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கினை நடாத்தி வருகின்றது.

இதுவரை அரச அதிபர் பணிமனை, பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள், மாநகரசபை, பிரதேசசபை, யாழ்.பிரதேச செயலகம் ஆகிய இடங்களில் எய்ட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.

இதுபற்றி தமிழீழ சுகாதார சேவைகள் யாழ்.மாவட்ட இணைப்பாளர் குணாளன் கருத்து தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் ஐந்நூறுக்கும் அதிகமானோர் எச்.ஐ.வி தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். இதனால் மேலும் பலர் எச்.ஐ.வி தொற்றுக்கு இலக்காகலாம். எனவே அனைவரும் ஒன்றிணைந்து விழிப்புடன் செயற்பட்டு எமது நாட்டில் எச்.ஐ.வி தொற்றை பூரணமாக இல்லாதொழிக்க ஒன்றுபட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை தொடர்ந்து ஏனைய அனைத்து பிரதேசங்களிலும் இவ்விழிப்புணர்வு கருத்தரங்குகள் இடம்பெறும் எனவும் தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.

## ஆறுமுக நாவலர் விழா

இறுங்கி தோட்டம் கந்தசாமி கோவில் தேவஸ்தானமும் (கைதடி) சைவ ஐக்கிய சங்கமும் இணைந்து நடாத்தும் ஆறுமுகநாவலர் விழா நாளை மறுதினம் பி.ப. 2.00 மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் ச.வீரசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (29)

## கணக்காளர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களில் கடமையாற்றும் கணக்காளர்களுக்கான கலந்துரையாடல் யாழ்.செயலக கேட்போர்கூடத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (29)

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு மாணவர் அமைப்பு உதவி

வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கி வாழும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த தமிழீழ மாணவர் அமைப்பு பல உதவிகளைச் செய்து வருகிறது.

அந்தவகையில் மின்னிணைப்பு இல்லாத மீள்குடியேற்றக் கிராமங்களில், நலன்புரி நிலையங்களில் வாழும் மாணவர்களின் இரவு நேரக் கற்றல செயற்பாடுகளை ஊக்குவிக்கு முகமாக பெற்றோல்மாக்ஸ் களை வழங்கிவருகிறது.

இத்துடன் மேலும் பல உதவிகளைச் செய்து மாணவர் சமுதாயத்தைக் கல்வியில் ஈடுபடுத்துவதற்கான பல நடவடிக்கைகளை இவ்வமைப்பு மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (14)

# யாழ்ப்பாண மாநகரசபை

## யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கான அறிவுறுத்தல்

***இத்தால் சகலருமறிக!***

1. ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறை வீதி, ஸ்ரான்லி வீதி ஆகிய வீதிகளில், தங்கள் வர்த்தகக் கடைக்கதவுகளின் எல்லைக்கப்பால் மேலதிகமாக இட்டுள்ள தாழ்வாரங்களை உடனடியாக அகற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். வீதிப் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாகவுள்ள இவற்றை அகற்றுவதோடு, நடைபாதையை மறித்துள்ள உங்கள் பொருட்களை பார்வைக்கு வைப்பதையும் தடை செய்கின்றேன்.

   டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன் இவை நிறைவேற்றப்படாவிட்டால், அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எம்மால் எடுக்கப்படும் என்பதை வர்த்தகர்களுக்கு அறியத்தருகின்றேன்.

2. ***நடைபாதை வியாபாரிகளுக்கு:–***

   யாழ்ப்பாண நகரத்தில் மேற்குறித்த வீதிகளில் நடைபாதை வியாபாரம் செய்வதும் இத்தால் தடைசெய்யப்பட்டுகின்றது. இந்த அறிவித்தலை மீறி, நடைபாதை வியாபாரத்தினைத் தொடர்ந்து நடாத்தின், அவை மாநகர சபையால் அகற்றப்படும் நிலை உருவாகும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**கலாநிதி.க.குணராசா**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
01.12.2004.

(C/3417)

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்காவிட்டால் நாடு பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாது

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு

**விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள தன்னாட்சியுள்ள இடைக் கால நிர்வாக யோசனை அடிப்படையில், சமாதானப் பேச்சுவார்த்தை விரைவாக ஆரம்பிக்கப்படாது விட்டால், நாடு பிளவுபடுவது தவிர்க்க முடியாத தாகி விடும் என - தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.**



ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய அவர்- விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் தின செய்தியில் குறிப்பிடப்பட்ட சில விடயங்களையும் நினைவு படுத்தினார்.

தன்னாட்சியுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பாக சில சிக்கல்கள் இருக்கலாம். அதனை பேச்சுவார்த்தை மூலம் ஆராய்ந்து, தீர்வு காண முடியும்.

குறிப்பிட்ட இடைக்கால நிரவாக யோசனை பண்டா-செல்வா ஒப்பந்தத்தையோ அல்லது டட்லி-செல்வா ஒப்பந்தத்தையோ மீறவில்லை.

இதனை விமர்சிக்கும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள், ஒற்றையாட்சியை நிலைநாட்ட வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டவர்கள்.

அந்த ஒற்றையாட்சி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது விடுதலைப் புலிகளின் தலைவர் மாவீரர் தின உரை தொடர்பாக அரசாங்கம் உட்பட, தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த உரை தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண.அத்துரலியே ரத்தின தேரர் வெளியிட்ட ஆட்சேபனையை, சபாநாயகர் எம்.ஜே.லொக்குபண்டார நிராகரித்தார்.

'பிரிவினைகோர மாட்டோம் என அரசியல் யாப்புக்கு அமைய பதவிப பிரமாணம் செய்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன்- மற்றுமொரு தனிராஜ்சியம் பற்றிப் பேசுவது அரசியல் யாப்புக்கு முரணானது' என அத்துரலியே ரத்தின தேரர் கூறினார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் 'அது நாடாளுமன்ற உறுப்பினரின் உரிமையாகும். அரசியல் யாப்புக்கு புறம்பான விடயங்கள்- அவரது உரையில இருககுமானால, ஹனசாடடில அது நீக்கப்படும்' என்றார்.

அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா உரையாற்றுகையில்- விடுதலைப் புலிகளின் தலைவருடைய மாவீரர்தின உரை தொடர்பாக ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வமான கருத்தை அடுத்த சில தினங்களில் வெளியிடுவார் எனத் தெரிவித்தார்.

ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக உரையாற்றுகையில் - நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்றால், விடுதலைப் புலிகள் உட்பட எநதத் தரப்பினருடனும் பேசுவதற்கு ஜே.வி.பி. தயார் எனக் குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச உரையாற்றுகையில் - அரசியல் யாப்பு திருத்தம் தவிர்க்கமுடியாதது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் தலைமையில் நிலையான ஆட்சியை ஏற்படுத்துவதே உத்தேச திருத்தத்தின் நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

# இலங்கை - அமெரிக்கா நட்புறவுச் சங்கம் அமைப்பு

இலங்கை நாடாளுமன்ற வரலாறறில் முதற் தடவையாக, இலங்கை மற்றும அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே நட்புறவுச் சங்கம் ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

அம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச இதன் தலைவராகவும், தேசிய வைதத்திய அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மற்றும் கடற்தொழில் அமைசசா் சந்திரசேன விஜயசிங்க ஆகியோா உபதலைவர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சா் முத்து சிவலிங்கம் செயலாளராகவுள்ள அதேவேளை, அரச மற்றும் எதிர்க்கட்சி அமைச்சா்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினா்களும் இந்தச் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனா்.

இரு நாட்டு நாடாளுமன்ற உறுப்பினா்களிடையேயும் அந்நியோன்னிய நட்பை அபிவிருத்தி செய்தல் மற்றும் அரசியல் அமைப்பு பற்றிய அறிவுகளைப் பரிமாறிக் கொள்ளுதல் என்பன - இதன் மூலம் ஏற்படுத்தப்படும் என சங்கத்தின் தலைவா் நம்பிக்கை வெளியிட்டாா். (தே)

# வரவு - செலவுத் திட்ட ஆராய்வுக்கு மேலாண்மைக் குழு அமைக்கப்படும்

வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக ஆராய்வதற்கு மேலாண்மைக்குழுவென்று உருவாககப்படவுள்ளதாக நிதியமைச்சா் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தா.

நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவா் இவ்வாறு தெரிவித்தாா். அங்கு அவா் மேலும் தெரிவித்தாவது -

இவ்வாறு உருவாக்கப்படும் இந்த மேலாண்மைக் குழுவில், அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினா்கள் நியமிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்ட நிதிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பது கண்காணிக்கப்படும்.

முன்னைய வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதிகள் உரிய முறையில் மக்களுக்குச் சென்றடையவில்லையென்ற குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையிலேயே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துடன், நாட்டில் பொருளாதார வீழ்ச்சி காணப்படும் நிலையில், திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் உரியமுறையில் பயன்படுத்தப்படாது விட்டால், அபிவிருத்தி பாரியளவில் பாதிப்படையும் எனவும் தெரிவித்தாா். (01)

# புலிகளின் யோசனைக்கு பின்னால் வெளிநாடுகள் இருக்கின்றனவாம்

## குற்றம் சாட்டுகிறார் விமல்வீரவன்ச



தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான யோசனையின் பின்னணியில், வெளிநாடுகள் இருப்பதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தாா்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நாட்டுப்பற்றுள்ள தேசிய அமைப்பின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவா் இவ்வாறு தெரிவித்தாா்.

அவா் மேலும் தெரிவித்ததாவது -

சா்வதேச நாடுகள் இலங்கைக்கு நிதி வழங்குதல் என்ற போா்வையில் தமது நோக்கங்களை நிறைவேற்ற முற்படுகின்றன. முன்னரும் எமது மக்களுக்கு ஆசைகாட்டி - மண்டியிட வைக்க முற்பட்ட ஒல்லாந்தா், போத்துக் கேயா், ஆங்கிலேயா் எமது நாட்டைச் சுரண்டினாா்கள்.

அதேபோன்று, தற்பொழுது 400 மில்லியன் அமெரிக்க டொலா் உதவி வழங்குகின்றோம். இடைக்கால நிா்வாகசபை அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பியுங்கள் என அழுத்தம் கொடுக்கின்றாா்கள் எனத் தெரிவித்தாா்.(தே)

# பலமான நாடாளுமன்ற அமைப்புக்கு ஐ.தே. கட்சியின் ஆதரவு பெறப்படும்

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

பலமான நாடாளுமன்றத்தை அமைப்பதற்கு அரசியல் அமைப்பில் செய்து கொள்ளப்படும் திருத்தங்களுக்கு ஜக்கியதேசியக் கட்சியின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளப் போவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தாா்.

தற்போதைய அரசியல் யாப்பு திருத்துவது தவிர்க்க முடியாது . நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு பிரதமரின் தலைமையில் ஸ்திரமான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு புதிய அரசியல் யாப்பு வழிவகுக்கும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுதற்கு நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினா்களும் ஆதரவு வழங்குவாா்கள் என்று எதிா்பாா்க்கிறோம்.

நேற்று முன்தினம் நாடாளுமனறத்தில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தின் போதே அவா் இந்தக் கருத்துக்களை வெளியிட்டாா்.

ஜனாதிபதி, பிரதம மந்திரி, உயா் நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான நீதி ஒதுக்கீடு சம்பந்தமான குழு நிலை விவாதங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. இந்த குழு நிலை விவாதத்தின்போது பிரதமா் இவ்வாறு தெரிவித்தாா்.

அரசாங்கம் இந்த நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டும் கடப்பாட்டைக் கொண்டிருக்கிறது. கடந்த 10 வருடங்களாகத் தனது பதவிக் காலத்தில் ஜனாதிபதி சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் தீவிரமாகப் பாடுபட்டுள்ளாா் என்று அவா் மேலும் தெரிவித்தாா்.



# சமாதான பேச்சுக்களுக்கு நோர்வே தொடர்ந்தும் அனுசரணை வழங்கும்

## நோர்வேத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் - அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவாா்த்தை தொடா்பான முடிவுகளை மேற்கொள்வதற்கு, நோா்வே தொடா்நதும் அனுசரணையாளராகச் செயற்படுமென இலங்கைக்கான நோா்வேத் தூதுவா் ஹான்ஸ் பிரட்ஸ்கா் தெரிவித்தாா்.

அநுராதபுரத்தில் 17 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தின் திறப்புவிழாவில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவா் இவ்வாறு தெரிவித்தாா்.

அங்கு அவா் மேலும் தெரிவித்ததாவது -

சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலமே, நாட்டில் அபிவிருத்தியை முனனெடுத்துச் செல்லமுடியும். வடக்கு - கிழக்கு தவிா்ந்த ஏனைய பகுதிகளின் அபிவிருத்திக்கும் நோா்வே தொடா்ந்தும் உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளது.

சமாதான முயற்சிகளில் நோா்வே எந்தத் தரப்புக்கும் சாா்பாக நடந்து கொள்ளமாட்டாது எனவும் அவா் தெரிவித்தாா். (01)

# துறைமுகப் பகுதிக்கு மேலதிக படையினர் குவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களையடுத்து, துறைமுகம் மற்றும் அதனை அண்மித்த நகரப் பகுதிகளுக்கு மேலதிக படையினா் அனுப்பபட்டுள்ளனா்.

திருமலை மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான படையினா் விடுமுறையில் சென்றுள்ள நிலையில், அவா்கள் உடனடியாகக் கடமைக்குத் திரும்பும் படி, திருமலை மாவட்ட இராணுவக் கட்டளைத் தலைமையகம் உததரவிட்டுள்ளது.

# வடக்கு - கிழக்கு ஆளுநராக டிரோன் நியமனம்

வடக்கு - கிழக்கு மாகாண புதிய ஆளுநராக டிரோன் பெர்னாண்டோ அடுத்த ஒரு சில தினங்களுக்குள் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளாா்.

வட-கிழக்கு மாகாண ஆளுனராகக் கடமையாற்றிய மேஜா் ஜெனரல் அசோக் ஜயவா்த்தன- தனது ஆளுநா் பதவியை ராஜினாமாச் செய்வதை அடுத்தே பெர்னாண்டோ நியமிக்கப்படவுள்ளாா்.

முன்னாள் ஆளுநா் அசோக ஜெயவா்த்தன - பாதுகாப்பு அமைச்சின் செயலராக நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

# நேர்முகப் பரீட்சையை வேறு மாவட்டத்தில் நடத்த கோரிக்கை

திருமலையில் நடைபெறுகிற ஆயிரம் ஆசிரியா்களைத் தெரிவு செயவதற்கான நோ்முகப் பரீட்சையை, வேறு மாவட்டங்களில் நடததுவதற்கு அல்லது பிற்போடுவதற்கு இலங்கை தென்-கிழக்கு கல்விப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலை நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் அமைதியற்ற சூழ்நிலை நிலவுவதன காரணமாக, அதன் கிழக்குக் கல்விப் பேரவை வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரிடமும், மாகாணப் பொதுச் சேவைக குழுவிடமும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

திருகோணமலையில் பதற்றம் நிலவுவதன் காரணமாக, வெளிமாவட்டத்திலிருந்து வரும் இளைஞா், யுவதிகள் - போக்குவரத் சீா்ன்மை காரணமாக அச்சமடைந்துள்ளனா். ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனா்.

இதேவேளை ஆயிரம் ஆசிரியா்களை தெரிவு செய்யும் பரீட்சையில் தோற்றியவா்களுக்கு, அவா்களின் பெறுபேறுகளைத் தனிப்பட்ட ரீதியாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

# 14 ஆயிரம் பட்டதாரிகளுக்கு மார்ச்சில் ஆசிரிய நியமனம்

ஜனாதிபதியின் பணிப்பையடுத்து, அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் 14 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரியா் நியமனம் வழங்கப்படவுள்ளன.

இந்த ஆண்டு நவம்பா் மாதத்துக்குள் நாட்டின் சகல பாடசாலைகளிலும் உள்ள ஆசிரியா் வெற்றிடங்களை நிரப்புமாறு ஜனாதிபதி பணித்துள்ளாா்.

இதற்கமைய எதிா்வரும் மாா்ச் மாதம் முதலாம் திகதி முன்னா் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சின் மேலதிக செயலாளா் எஸ்.ஏ.குணவா்த்தன தெரிவித்தாா்.

அடுத்த வருடத்துக்குள் தேவையான பாடநூல்களில் மொத்த எண்ணிக்கையில் 70 சதவீதமானவை பாடசாலைகளுக்கு பகிா்ந்தளிக்கப்பட்டுள்ளன. இதற்கு கல்வி அமைச்சு ஒவ்வொரு வருடமும் 77 கோடி ரூபா செலவில், 2 கோடி பாடப் புத்தகங்களை அச்சிட்டிருப்பதாகவும் அவா் தெரிவித்தாா்.

# ஜோர்தானில் 140 பேர் நிர்க்கதி நிலையில்

ஜோர்தானில் சுமாா் 140 இலங்கைப் பெண்கள் நிா்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளதாக **தெரிவிக்கப்பட்டது. இவா்களுக்கு உரிய தொழில்கள்** இன்றி. முகாம் ஒன்றில் உணவுகள் இன்றி இருக்கின்றனா்.

இவா்களை நாட்டுக்குத் திருப்பியழைக்கவோ அல்லது மீண்டும் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவோ இலங்கை அரசாங்கம் முயற்சி எதனையும் மேற்கொள்ளவில்லை எனக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

வெளிநாடுகளில் பணியாற்றும் பெண்களிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு 13,645 கோடி ரூபா வருமானமாக இலங்கைக்கு வருகின்ற போதும், பணிப்பெண்கள் தொடா்பாக அரசாங்கம் உருப்படியான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது.

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட்; இந்தியாவுக்கு வெற்றி கிட்டுமா?



(கொல்கத்தா)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் ஐந்தாவது நாளான இன்று நண்பகலுக்குள் தென்னாபிரிக்க அணியின் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினால் இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸில் 305 ஓட்டங்களை எடுத்தது.

இதையடுத்து ஆடிய இந்திய அணி ஷேவாக், ராவிட் ஆகியோரின் அபார ஆட்டத்தால் 3 ஆவது நாளான நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 359 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தினேஷ் கார்த்திக் 35 ஓட்டங் களுடனும், பதான் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது. இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். 7 ஓட்டங்கள் எடுப்பதற்குள் இந்தியா ஒரு விக்கெட்டை இழந்தது.

பதான் 24 ஓட்டங்கள் எடுத்த நிலையில் என்ரினியின் பந்துவீச்சில் ஸ்மித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். கும்ளே 8 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக கார்த்திக்குடன் இணைந்தார்.

அணியின் ஸ்கோர் 382 ஆக இருந்த போது கும்ளே ஆட்டமிழந்தார். அவர் தனது பங்குக்கு 8 ஓட்டங்கள் எடுத்தார். அவரது விக்கெட்டை கலிஸ் கைப்பற்றினார். அடுத்து ஹர்பஜன்சிங் களமிறங்கினார்.

சிறிது நேரத்தில் விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் பொலக் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அவர் 147 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 46 ஓட்டங்களைப் பெற்றார். அப்போது அணியின் ஸ்கோர் 387 ஆக இருந்தது.

கடைசி விக்கெட்டுக்கு ஜோடியாக சகீர் கான், ஹர்பஜன் சிங்குடன் இணைந்தார். இருவரும் சற்று அடித்து ஆடினர்.

இந்திய அணி 147 ஆவது ஓவரில் 400 ஓட்டங்களைக் கடந்தது. உணவு இடைவேளைக்கு முந்தைய ஓவரில் ஹர்பஜன்சிங் 14 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். இதனால் இந்தியா முதல் இனிங்ஸில் 411 ஓட்டங்களைக் குவித்தது.

106 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உணவு இடைவேளைக்கு பின்னர் 2 ஆவது இனிங்ஸை தென்னாபிரிக்கா ஆடத்தொடங்கியது. ஸ்மித்தும், ஹோலும் களமிறங்கினர்.

இருவரும் இந்திய வீரர்களின் பந்து



வீச்சை நிதானத்துடனும், அதேசமயம் அடித்தும் ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இதனால் அந்த அணி 17 ஆவது ஓவரில் 50 ஓட்டங்களைக் கடந்து.

தொடக்க ஜோடியைப் பிரிக்க கங்கூலி பந்துவீச்சில் மாற்றம் கொண்டுவந்தார். எனினும் அதில் எந்தவித பலனும் இல்லை.

தென்னாபிரிக்க அணி 77 ஓட்டங்களை எடுத்திருக்கும்போது ஹர்பஜன்சிங் பந்தில் ஹோல் 21 ஓட்டங்களுடன் விக்கெட் காப்பாளர் கார்த்திக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து 2 ஆவது விக்கெட் ஜோடியாக ருடோல்ப், ஸ்மித்துடன் இணைந்தார். இவர் அதிக நேரம் நீடிக்கவில்லை. 3 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஹர்பஜன் சிங்கின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அப்போது தென்னாபிரிக்கா 2 விக்கெட் இழப்புக்கு 81 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அடுத்து ஸ்மித்துடன் முதல் இனிங்ஸில் சதமடித்த கலிஸ் ஜோடி சேர்ந்தார். ஒரு முனையில் விக்கெட் வீழ்ந்தாலும், மறுமுனையில் சிறப்பாக ஆடி அரைச்சதம் அடித்தார் ஸ்மித்.

தென்னாபிரிக்கா 126 ஓட்டங்களுடன் இருக்கும்போது 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஸ்மித் ஹர்பஜன்சிங் பந்தில் லக்ஷ்மணிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஹர்பஜன்சிங் சிறப்பாக பந்துவீசி 3 விக்கெட்டையும் கைப்பற்றினார். ஹர்பஜன் சிங் பந்தை அடிப்பதற்கு தென்னாபிரிக்க வீரர்கள் திணறினர்.



அடுத்து 4 ஆவது விக்கெட் ஜோடியாக கலிஸுடன் அம்லா ஜோடி சேர்ந்தார். இவர் 2 ஓட்டங்களை எடுத்த நிலையில் லக்ஷ்மணிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது தென்னாபிரிக்கா 138 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அடுத்து டிப்பென்னர் ஆடவந்தார். இவரும் வந்தவுடனேயே வெளியேறினார். 2 ஓட்டங்களைப் பெற்றநிலையில் கும்ளே பந்தில் ஷேவாக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது தென்னாபிரிக்கா 5 விக்கெட் இழப்புக்கு 147 ஓட்டங்களை எடுத்திருந்தது. அடுத்து புரூன் ஆடவந்தார். இருவரும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் தடுத்து ஆடினர்.

ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் கலிஸ் தடுத்து ஆடி அரைச்சதம் அடித்தார்.

4 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்கா 5 விக்கெட் இழப்புக்கு 172



ஓட்டங்கள் எடுத்து இந்தியாவை விட 66 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

இன்று ஆட்டத்தின் மதிய உணவு இடைவேளைக்கு முன்னர் எஞ்சிய ஐந்து விக்கெட்டுக்களையும் கைப்பற்றினால் இந்திய அணி இந்த டெஸ்டைக் கைப்பற்ற வாய்ப்புள்ளது.

## டெண்டுல்கரின் 'கட்ச்' கிரிக்கெட்டில் மிகச்சிறந்தது

### ரொட்ஸ் கூறுகிறார்



டெண்டுல்கரின் 'கட்ச்' தனது கிரிக்கெட் வரலாற்றில் மிகச்சிறந்தது என தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஜொன்டி ரொட்ஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது -

1992 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின்போது டெண்டுல்கர் அடித்த பந்தை கட்ச் செய்தது கிரிக்கெட் வாழ்நாளில் சிறந்தது. எனது வெற்றிக்குத் துடிப்பும், அதிக கவனமுமே காரணம்.

தற்போது கிரிக்கெட்டில் அவுஸ்ரேலிய அணி தலைசிறந்து விளங்குகின்றது. அந்த அணி பலம் வாய்ந்ததாக உள்ளது. தென்னாபிரிக்க அணியில் இளம் வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்கு முன்பாக தென்னாபிரிக்க அணி தலைசிறந்து விளங்கும். இவ்வாறு அவர் கூறினார்

விளையாட்டு

## அவுஸ்ரேலிய அணியில் மீண்டும் சைமன் கடிச்!

நியூஸிலாந்துடனான ஒருநாள் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் சைமன் கடிச் இடம்பிடித்துள்ளார்.

அவுஸ்ரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட செப்பல் - ஹாட்லி டிரொபி ஒருநாள் தொடர் எதிர்வரும் ஞாயிறன்று தொடங்கவுள்ளது. இந்தத் தொடருக்கான 14 வீரர்கள் அடங்கிய அவுஸ்ரேலிய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. அணியில் ஒரேயொரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இயன் ஹார்வி நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக சைமன் கடிச் சேர்க்கப்பட்டுள்ளார்.

அணி விபரம் - ரிக்கி பொண்டிங் (கப்டன்), அடம் கில்கிறிஸ்ட், மைக்கல் கிளார்க், மத்தியூ ஹைடன், ஜிலெஸ்பி, பிரட் ஹொக், மைக்கல் கஸ்பரோவிச் சைமன் கடிச், பிரட் லீ, டரன் லீமன், டேமியன் மார்ட்டின், மக்ரா, அன்ரூ சைமன்ஸ் மற்றும் ஷேன் வோன்.

## மீண்டும் தனது திறமையை டெண்டுல்கர் வெளிப்படுத்துவார்

### ராகுல் ராவிட் தெரிவிப்பு

(கொல்கத்தா)

டெண்டுல்கர் மீண்டும் தனது திறமையை வெளிப்படுத்துவார் என இந்திய அணியின் துணைக் கப்டன் ராவிட் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

டெண்டுல்கர் தலைசிறந்த கிரிக்கெட் வீரர் அவர் 120 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளார்.



அனைவருக்கும் இது போன்ற பிரச்சினைகள் சில சமயங்களில் ஏற்படும்.

இந்த நிலையிலிருந்து டெண்டுல்கர் மிக விரைவாக மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி தனது திறமையை வெளிப்படுத்துவார்.

அவர் கடந்த இரண்டு மாதங்களாக காயம் காரணமாக ஆடவில்லை. இது ஒன்றும் பெரிய இடைவெளியென்று கூற முடியாது.

மேலும் முதல் இனிங்ஸில் தென்னாபிரிக்க அணியை விட கூடுதலாக 100 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்தால் போதும். இதன் மூலம் அந்த அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தலாம். இந்த டெஸ்டில் சிறப்பாக ஆடி வெற்றி பெறுவதே எங்கள் குறிக்கோள் எனத் தெரிவித்தார்.



**கிரிக்கெட் வீரர்களான நியூஸிலாந்தின் ரிச்சட்சன், அவுஸ்ரேலியாவின் டரன் லீமன் பங்கேற்ற வித்தியாசமான 110 மீற்றர் ஓட்டம் நேற்று அவுஸ்ரேலியாவின் அடிலெய்ட் நகரில் நடைபெற்றது.**

**சேவை அமைப்புக்கு நிதி திரட்ட நடந்த இந்தப் போட்டியில் ரிச்சட்சன் வெற்றிபெற்றார்.**

## உலக ஜூனியர் செஸ்; இந்திய வீரர் சம்பியன்

கேரள மாநிலம் கொச்சியில் உலக ஜூனியர் டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் நடந்த 13 ஆவது மற்றும் கடைசிச் சுற்றுப்போட்டியில் கிராண்ட் மாஸ்டர் ஹரி கிருஷ்ணா, ஹங்கேரியின் பெரங்க் பெர்க்சை சந்தித்தார்.

இருவரும் மிகுந்த கவனத்துடன் செயற்பட்டனர். இறுதியில் 50 ஆவது நகர்த்தலில் போட்டியை சமன் செய்ய ஒத்துக்கொள்ள, ஹரிகிருஷ்ணா 10 புள்ளிகளுடன் சம்பியன் பட்டம் வென்றார்.

இதன்மூலம் விஸ்வநாதன் ஆனந்திற்கு பிறகு உலக ஜூனியர் பட்டம் பெறும் இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையை ஹரிகிருஷ்ணா பெற்றார். 1987 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸில் நடந்த போட்டியில் ஆனந்த் பட்டம் வென்றார்.

இந்த வெற்றி குறித்து மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்த ஹரிகிருஷ்ணா - 2005 ஜனவரியில் நடக்கவுள்ள ஆசிய சம்பியன்ஷிப் போட்டியில் சாதிப்பதே அடுத்த குறிக்கோள் என்றார்.

ஹரிகிருஷ்ணாவுக்கு கடும் போட்டியைக் கொடுத்த சீனாவின் ஜாசனால் 9.5 புள்ளிகளுடன 2 ஆவது இடத்தையே பிடிக்கமுடிந்தது.

இவர் நேற்றுமுன்தினம் போலந்தின் ரோடஸ்லாவ் வோஜ்டாகிடம் தோல்வியடைந்து வாய்ப்பை இழந்தார்.

பெண்கள் (20 வயதிற்குட்பட்ட) பிரிவில் ரஷ்யாவின் எகாதிரினா கோர்பட் 10.5 புள்ளிகளுடன் சம்பியன் பட்டம் வென்றார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## மதகு திருத்த வேலைகள் பூர்த்தி

குருநகர் மவுண்கார்மேல் வீதி மதகு திருத்த வேலைகள் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்ததையடுத்து, அந்த வீதியூடான போக்குவரத்துகள் வழமைக்குத் திரும்பின.

பாரிய சேதத்திற்கு உள்ளாகிப் பல வருடங்களாக திருத்தப்படாமலிருந்த இந்த மதகின் திருத்த வேலைகள் ஒரு மாத காலமாக நடைபெற்றுவந்தன.

அதனால், அந்த வீதியால் போக்குவரத்தை மேற்கொள்ளும் வாகனங்கள், பாடசாலை மாணவர்கள் கடந்த ஒரு மாத காலமாகப் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வந்தமை குறிப்பிடத்தக்கது. (206)

## குன்றும் குழியுமாக ஆறுகால்மடம் வீதி

மானிப்பாய் பிரதான வீதியில், ஆறுகால்மடப் பகுதியில் நீண்ட காலமாக குன்றும் குழியு மாகக் காணப்படுவதால், அந்த வீதியூடாகப் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆறுகால்மடம் புதுறோட் சந்தியல் இருந்து, ஆனைக்கோட்டை வரையான வீதியே குன்றும் குழியுமாகவுள்ளது.

மிக அண்மையில் இந்த வீதிகள் திருத்தப்பட்ட போதிலும், தொடர்ச்சியாகப் பெய்த மழையாலேயே இந்த வீதி சேதமடைந்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (91)

# இந்து கலாசார அமைச்சு நடத்தும் நாவலர் குருபூசை தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தின விழா, நாளை மறுதினம் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் மாலை 4 மணிக்கு சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் ஆரம்பமாக பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி அம்பாள் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெறும். பிற்பகல் 3.15 மணிக்கு சைவக் குருமார் பயிற்சிக் கல்லூரியிலிருந்து ஆறுமுகநாவலரின் படத்துடன் ஊர்வலம் ஆரம்பமாகி முடமாவடிச்சந்தி கோயில் வீதியூடாக பிற்பகல் 4 மணிக்கு நாவலர் மண்டபத்தை வந்தடையும். தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மங்கள விளக்கேற்றல், கடவுள் வணக்கத்தைத் தொடர்ந்து அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், ஆசியுரையை சைவக் குருமார் ஒன்றிய அதிபர் சிவஸ்ரீ ச. மகாலிங்க சிவக் குருக்களும், வரவேற்புரையை வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் கந்த.சத்தியதாஸனும், வாழ்த்துரையை மாநகரசபை ஆணையாளர் க.குணராசாவும் நிகழ்த்துவர்.

தலைமையுரையைத் தொடர்ந்து சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் சி.சஜீவனின் பேச்சு இடம்பெறும். தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர் 'நாவலரின் சமயப் பணிகள்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து 'நாவலரின் சிந்தனையும் சைவத்தின் இன்றைய நிலையும்' எனும் தலைப்பில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் ஏ.அனுஷாந்தனின் சிறப்புச் சொற்பொழிவு, யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவி மீனா துரைசிங்கத்தின் கவிதை, ஆசிரியர் செ.பரமேஸ்வரனின் நெறிப்படுத்தலில் புன்னாலைக்கட்டுவன் தமிழ் மன்றம் வழங்கும் 'நாவலர் சைவத்தின் காவலர்' வில்லுப்பாட்டு மற்றும் காரைநகர் புகலி சிவசுப்பிரமணியர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஏழாலை ஆத்ம ஜோதி அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

## நிதி ஒதுக்கீடு பெறப்படவில்லை

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட ஆனைக்கோட்டை புனித மைக்கல் சனசமூக நிலையத்திறகென ஒதுக்கப்பட்ட நிதியை சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை பெற்றுக்கொள்ளவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 30 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். எனினும் இந்த நிதியை மேற்படி சனசமூக நிலையத்தினர் இதுவரை பெற்றுக் கொள்ளவில்லையென பிரதேச சபையினர் தெரிவத்தனர். (91)

# நெல்லியடி மத்தியில் தேங்கும் வெள்ளத்தால் இயல்புநிலை பாதிப்பு

நெல்லியடி சந்தியின் மத்திய பகுதியிலிருந்து பிரிந்து செல்லும் நான்கு வீதிகளிலும் பக்கமாக உள்ள வீடுகளில் வாழும் குடும்பங்கள் - மழை காலங்களில் வெள்ளம் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவித்தனர்.

வீதி மேடாகவும் கரையோரம் மிகத் தாழ்வாகவும், வாய்க்கால் கட்டப்படாத நிலையில் தண்ணீர் வழிந்து, வீடுகளுக்குள் புகுந்து தேங்கிநிற்பதால் நுளம்புத் தொல்லையும் அதிகரித்துள்ளது.

மழைநீர் சீராக வழிந்தோட வாய்க்கால் கட்டப்படாததால், வீதியின் இரு கரையோரங்களும் வெள்ளத்தால் அரிக்கப்பட்டு சேதமாகி வருகிறது. வீதியையும், குடிமனைகளையும் பாதுகாக்கும் வகையில் - சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்கவேண்டும் எனவும் நெல்லியடிப் பகுதிப் பொதுமக்கள் கோரியுள்ளனர். (13)

# தாயகம் திரும்பிய அகதிகளுக்கு ஐ.ஓ.எம். நிறுவனம் நிதியுதவி!

இந்தியாவிலிருந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்கள், மீளத் தொழிலை ஆரம்பிப்பதற்கான உதவிகளை ஐ.ஓ.எம் என்ற சர்வதேச நிறுவனம் வழங்கி வருகின்றது.

இந்த நிறுவனத்தால், மீளக் குடியமர்ந்தவர்கள் மீண்டும் தமது தொழிலை ஆரம்பிப்பதற்கான உபகரணங்கள் வழங்கப்படுவதுடன், தொடர்ந்து மாதாந்தம் ஆயிரத்து 400 ரூபா வீதம் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும்.

தற்போது, இந்த வருடம் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னர் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு முதல் கட்டமாக உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இரண்டாவது கட்டமாக ஜனவரி முதல் ஏப்ரல் 15 ஆம் திகதி வரை மீளக் குடியமர்ந்தவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு ஐ.ஓ.எம் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த காலப்பகுதிகளில் மீளக் குடியமர்ந்தவர்கள் கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஊடாக தொடர்பு கொள்ளுமாறும் இந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

விமானம், படகுகள் மூலம் மீளத் திரும்பியவர்கள், மீளத் திரும்பியமையை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

# ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சயம விவகார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடர் - 104 நாளை நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 6.30 மணிக்கு இடம்பெறும்.

நாவலர் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில், நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு 'நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக' எனும் பொருளில் நா.நவராஜ் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.




றீடோ நிறுவனத்தினரால் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடத்தப்பட்ட பெற்றார் வீட்டுக் கல்வியில் இணைந்து கற்ற பயனாளிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் கூளாவடி அமெரிக்கன் மிசன் பாடசாலை அதிபர் நாகையா பயனாளி ஒருவருக்கு பரிசு வழங்குவதை முதலாவது படத்திலும் பயனாளிகளை இரண்டாவது படத்திலும் காணலாம். (44)

# திறந்த வெளியரங்குப் பகுதி கழிவுகளால் துர்நாற்றம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். திறந்த வெளியரங்கப் பகுதி, குப்பை கூழங்களைப் போட்டுத் தேக்கும் பகுதியாக மாறி வருகிறது.

கடல் உணவுக் கழிவுகள், கால்நடைக் கழிவுகள், இறந்த கால்நடைகளின் எச்சங்கள், வேறு பொருட்கள் என்பன அந்தப் பகுதியில் பெருமளவில் கொட்டப்பட்டிருப்பதால், அவற்றில் இருந்து எழும் துர்நாற்றத்தைச் சுவாசிக்க முடியாதவர்களாக - சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியால் செல்லும் பிரயாணிகள் அவதியுறுகின்றனர்.

யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினரும், அந்தப் பகுதியையே கழிவுப் பொருட்களைக் கொட்டும் இடமாக்கியுள்ளனர்.

இந்தப் பகுதிக்கு அண்மையாக பொலிஸ் நிலையம், கல்லூரி, பொது நூலகம், நடைபாதைக் கடைகள், ஆலயம், மற்றும் வீரசிங்கம் மண்டபத்தில் அரச மற்றும் கூட்டுத்தாபன காரியாலயங்கள் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (206)

# கோண்டாவில் டிப்போ வீதியை புனரமைக்கக் கோரிக்கை!

கோண்டாவில் டிப்போ பிரதான வீதியிலிருந்து உரும்பிராய் தெற்கு செல்வபுரத்துக்குச் செல்லும் வீதி பல வருடங்களாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளமையால், குறிப்பிட்ட வீதியை மக்கள் பாவனைக்காகப் புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதியூடாக - பாடசாலை மாணவர்கள், மற்றும் பொதுமக்கள் பிரயாணம் செய்கின்றனர்.

பலவருடங்களாகத் திருத்தப்படாத இந்த வீதி பாரிய குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றது. மழை காலங்களில் இந்த வீதியில் நீர் தேங்கிக் காணப்படுவதால் தொற்று நோய்கள் பரவக் கூடிய அறிகுறிகளும் தென்படுகின்றன.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்த வீதியை புனரமைத்துத்தர வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (82)

# பிறந்ததின வாழ்த்துக்கள்

## அகவை ஒன்று



பெயர் : சி.தவப்பிரியா
முகவரி : பன்னாலை.

## அகவை ஒன்று



பெயர் : யோ.கஜீவன்
முகவரி : நவிண்டில்

## அகவை இரண்டு



பெயர் : ஜெ.தாட்சாஜினி
முகவரி : அச்செழு, நீர்வேலி.

## அகவை இரண்டு



பெயர் : சி.சினேதா
முகவரி : பொலிகண்டி

## அகவை நான்கு



பெயர் : சி.தவக்குமரன்
முகவரி : பன்னாலை

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ------------------
------------------
முகவரி : ------------------
------------------
பிறந்த ஆண்டு : ------------------

கூப்பன்கள் பக்கமும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்




# வீணாகும் விவசாய உற்பத்திகளை உரிய நடவடிக்கைகள் மூலம் தடுக்கலாம்

எமது அன்றாட உணவுத் தேவைகளுக்காகப் பலவகைப்பட்ட மரக்கறிகளும், பழவகைகளும் சந்தைக்கு வருகின்றன. இவை உற்பத்தியாளனிடமிருந்து மொத்த வியாபாரிகளாலும், சில்லறை வியாபாரிகளாலும் கொள்வனவு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு விளை நிலங்களிலிருந்து கொண்டு வரப்படும் மரக்கறிகளும், பழவகைகளும் தொடர்ந்து நல்ல நிலையில் இருக்கின்றன என்று கூறமுடியாது. இவற்றின் ஒரு பகுதி பழுதடைவதோடு, வீணாகவும் போகிறது.

ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மெற்றிக்தொன் நிறையுள்ள மரக்கறி, பழவகைகள் சந்தைக்கு எடுத்துவரப்படும் பொழுது அழிந்துபோகிறது. அவற்றின் பெறுமதியும் அதிகமாக இருக்கிறது.

இவ்வாறு பழுதாகும், வீணடிக்கப்படும் விவசாய உற்பத்திகளில் - விவசாயிகளின் முயற்சி, உழைப்பு, முதலீடு ஆகியன அடங்கியுள்ளது. இதனால் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய லாபம் குறைகிறது. ஒரு புறத்தில் உற்பத்திச் செலவை ஈடுசெய்வதற்காக மரக்கறி, பழவகைகளின் விலையை அதிகரிக்க வேண்டியுள்ளது. மறுபுறத்தில் இது வாடிக்கையாளர்களைப் பாதிக்கிறது.

**இதனைத் தடுக்க வேண்டும். எவ்வாறு தடுப்பது?**

இவ்வாறு ஏற்படும் அழிவுகளை ஒரு பிரிவால் மட்டும் தடுக்க முடியாது. இதற்காகக் கீழ்வரும் அனைத்துப் பிரிவுகளையும் இணைத்துக் கொள்ளவேண்டும்.

**01. விவசாய உற்பத்தியாளர்கள்.**
**02. விவசாய உற்பத்திகளை சேகரிப்பவர்கள்.**
**03. மொத்த வியாபாரிகள்**
**04. சில்லறை வியாபாரிகள்**
**05. வாடிக்கையாளர்கள்**

மேற்குறிப்பிட்ட ஐந்து பிரிவினரின் செயற்பாடுகளால், வெவ்வேறு மட்டத்தில் மரக்கறி, பழவகைகளுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே மேற்குறித்த பிரிவினர், இந்த விடயத்தில் தமது அவதானத்தைச் செலுத்தினால், பாதிப்புக்களைக் குறைக்க முடியும்.

முதலில் வீணாவதைக் குறைத்துக் கொள்வதற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்கு முன்னர், இவை வீணாகும் முறை பற்றிய அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

தாவரம், மரங்களிலுள்ள மரக்கறிகள், பழவகைகள் அவற்றின் உயிருள்ள பகுதியாகும். அந்தப் பகுதிகளை மரத்திலிருந்து வேறாக்கிக் கொண்டாலும், உயிர்தங்கி இருக்கும். இதனால் ஏனைய உயிரினங்கள் போன்று, இவற்றிலும் சுவாசிக்கும் செயற்பாடு நடைபெறும். இந்த சுவாசச்செயற்பாடுகளின்போது நடைபெறும் உயிர் இரசாயன மாற்றங்களால், அதில் அடங்கியுள்ள நீரின் அளவு குறையும்.



அதே நேரம், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படும் நசிவு, கீறல்கள் காரணமாக அவற்றின் சுவாச வேகம் அதிகரிக்கும். அதேபோல் மிகவிரைவாக பற்றீரியா நோய்ப்பாதிப்பு ஏற்படுவதால் விரைவாக அழுகியும் விடும்.

தக்காளி, மாங்காய், வாழை, தோடம் பழங்கள் போன்றவற்றில் ஏற்படும் விசேட உயிர் இரசாயன மாற்றங்களின் காரணத்தால் 'எதலீன்' என்ற வாயு உருவாகும். இதனால் பழங்கள் விரைவாக பழுத்து, அழுகிவிடும்.

மேற்குறித்த செயல்களால் மரக்கறிகள், பழவகைகள் விரைவாக அழுகி வீணாகின்றன. ஆனால், இதனைத் தாமதப்படுத்துவதன் மூலம், இவற்றைப் பல காலம் வீணாகாமல் பாதுகாக்க முடியும்.

**அதனை எவ்வாறு செய்வது?**

இவை பழுதடைவதற்கும், அழுகுவதற்குமான காரணங்களை அறிந்து கொள்ள வேண்டும். அவையாவன,

1. **உரிய நேரத்தில் விளைச்சலைப் பெறாமல் விடுதல்.**
2. **வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படும் நசிவுகள், கீறல்கள் என்பன.**
3. **பிழையான களஞ்சியப்படுத்தல்.**
4. **வியாபாரத்துக்கென மரக்கறிகள், பழவகைளை அங்கும், இங்கும் கொண்டு செல்லும் காரணத்தால் அதிகமான வெப்பநிலைக்கு ஆழாகுதல்.**
5. **தவறான பாதிப்பு.**
6. **தவறான களஞ்சியப்படுத்தும், பொருட்களை உபயோகித்தல்.**
7. **காற்று கிடைக்காத தன்மை.**
8. **தேவையற்ற அளவில், வெளிப்புறத்தில் நீர்த்தன்மை காணப்படல்.**

மேற்குறிப்பிட்ட காரணங்களால் மரககறிகள், பழவகைகள் விரைவாகப் பழுதடைகின்றன. இவற்றைத் தவிர்த்துக் கொள்வதனால், பலகாலம் மரக்கறி, பழவகைகளைப் பாதுகாக்க முடியும்.

இதனை அனைத்துப் பிரிவுகளில் உள்ளவர்களும் தடுத்துக் கொள்ளலாம். முக்கியமாக விவசாயிகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம்.

(தொடரும்...)

சசி சந்திரகாசன்

# விவசாய உபகரணங்களை உபயோகிக்கும்போது அறிந்துகொள்ளவேண்டிய விடயங்கள்



விவசாய செயற்பாடுகளின்போது பல உப கரணங்கள், கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தகுந்த முறையில் பராமரிக்காவிட்டால் இவை விரைவில் பழுதடையும் வாய்ப்புகளுண்டு. எனவே, இவற்றை நாம் உரிய முறையில் பாதுகாத்துக் கொள்ளும் முறைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும்.



இவ்வாறான உபகரணங்கள், கருவிகளை விலை கொடுத்து கொள்வனவு செய்யும்போது, தரம் கூடிய வற்றைத் தேர்ந்தெடுத்து, கொள்வனவு செய்யவேண்டும். அத்துடன் இவை பல காலம் பாவிக்கக்கூடியவாறும் இருக்கவேண்டும்.

உருக்கு, ஐம்பொன் போன் றவற்றைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உபகரணங்கள், கருவிகள் பல காலம் வைத்திருந்து பயன்படுத்தக்கூடியன. மேலும் இவை விரைவில் துருப்பிடிக்காதன வாகவும் இருக்கின்றன.



பாவனைக்குப் பின்னர் உபகரணங்கள், கருவிகளைச் சுத்தமாக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

தினந்தோறும் தேவைக்கு உபயோகிக்கும் உபகரணங்களைப் பாவித்த பின்னர், மண்ணை நீக்கிச் சுத்தமாக்கி உரிய இடத்தில் வைக்க வேண்டும்.

விவசாய உபகரணங்கள் அடிக்கடி பாவனைக்குட்படுத்தப்படுவதால், விரைவாகப் பழுதடையும் வாய்ப்புண்டு. எனவே, பாவனைக்குப் பின்னர் சுத்தமாக்கலுக்கு மேலதிகமாக எண்ணெய் பூசி, காய்ந்த துணி ஒன்றை உபயோகித்துத் துடைத்துக் கொள்ள வேண்டும்.

சில உபகரணங்களுக்கு மரப்பிடிகள் இருக்கும் . காலம் செல்லச் செல்ல இந்த மரப்பிடிகள் வெடிக்கும். எனவே உரிய கவனம் செலுத்தவேண்டும். கூராக்கி வைத்துக்கொள்ளவேண்டும்.

உபகரணங்கள், கருவிகளைக் கூராக்கி வைத்திருப்பதன் மூலம் விவசாய நடவடிக்கைகளை தடங்கலின்றி மேற்கொள்ளமுடியும். இவற்றைக் கூர்த்தன்மையுடன் வைத்திருப்பதுடன், துருப்பிடிப்பதைத் தவிர்க்க முடியும். இதற்கு அரம், எண்ணெய், கற்களைப் பயன்படுத்தி உபகரணங்கள், கருவிகளைக் கூராக்கிக் கொள்ளலாம். இதனால் மரங் களைக் கத்தரித்தல், நிலத்தைக் கொத்துதல் போன்ற நடவடிக்கைகளை இலகுவாக்கிக் கொள்ளலாம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 150/= | 100/= | 110/= | 100/= | 100/= | 100/= |
| வெண்டிக்காய் | 60/= | 60/= | 70/= | 60/= | 60/= | 80/= |
| உருளைக்கிழங்கு | 100/= | 70/= | 80/= | 100/= | 90/= | 90/= |
| கத்தரிக்காய் | 90/= | 90/= | 100/= | 90/= | 90/= | 100/= |
| பாகற்காய் | 150/= | 100/= | 120/= | 120/= | 120/= | 120/= |
| கரட் | 30/= | 100/= | 110/= | 60/= | 70/= | 110/= |
| பீற்றூட் | 40/= | 60/= | 70/= | 60/= | 70/= | 80/= |
| முருங்கைக்காய் | - | - | - | - | - | - |
| வெங்காயம் | 50/= | 40/= | 50/= | 50/= | 50/= | 70/= |
| பச்சை மிளகாய் | 180/= | 150/= | 160/= | 200/= | 200/= | 180/= |

## தொழில்மலர்

# எதிர்கால வாழ்வுக்குப் பயனுள்ள தொழில்நிலைக் கல்வி...

இரா.விஜேந்திரன்

சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்கில் செயற்பட்டு வரும்திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பணி இன்றைக்கு 125 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. அநாதைச் சிறுவர்களை உள்வாங்கி, ஆசாரத்துடன் அறிவு புகட்டி ஒரு தொழிலோடு வெளியேற்றும் இந்த நிறுவனம், ஒரு பேராசிரியரையும், பட்டதாரிகளையும் உருவாக்கியுள்ளதோடு, சமூகப் பண்புள்ளவர்களாகப் பலரை வளர்த்தெடுத்தமையானது – நிறுவனம் தனது இலக்கில் இருந்து இன்றும் தவறவில்லை என்றே கூறவேண்டும்.

இந்தச் சங்கத்தின் ஸ்தாபகராகப் பெரியார் சபாபதியைக் கூறினாலும், இதன் வளர்ப்புத் தந்தையாக சரியான முறையில் திட்டமிட்டு முழுமையாகச் சிறுவர்களை வழிநடத்தி, ஆளாக்கிய பெருமையும், கடந்த காலங்களில் 40 வருடங்கள் தொடர்ச்சியாகச் செயலாளராக இருந்து, அனைத்துப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டு சேவையாற்றியவர் இந்துபோட் ராஜரட்ணம்.

இவரது காலத்தையே சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் பொற்காலம் என அழைக்கின்றனர். இங்கு வரும் சிறுவர்கள் கல்வி பெறுவதுடன், ஒரு தொழிலோடு வெளியேற வேண்டும். வெளியேறி சமூகத்துக்குச் சேவை செய்வதுடன், அநாதைகள் என்ற நிலை இல்லாது, தனித்துத் தமது தேவைகளைத் தாமே நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்கவேண்டும் என்பதே இந்து போட் ராஜரட்ணத்தின் நோக்கமும், அவாவும் ஆகும்.

அவரது அன்றைய சிந்தனையின் செயல் வடிவமாகவே கடந்த மாதம் இடம்பெற்ற தையல் கண்காட்சி விற்பனை என்றால் அது மிகையாகாது. கடந்த ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி முதல் மூன்றுதினங்கள் தைக்கப்பட்ட ஆடைகள், மிதியடிகள், அலங்கார மாலைகள், பொம்மைகள் என சிறுவர்களின் ஆக்கங்களைக் கொண்டு சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் கண்காட்சியும், விற்பனையும் இடம் பெற்றது. தரம்–9, 10 இல் கல்வி பயிலும் 14 மாணவிகளதும், 2 மாணவர்களதும் கைத்திறன் வெளிப்பாடுகளை வெளிக்கொணர்வதற்காகவே இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டது.

சங்க நிர்வாகிகள், பொறுப்பாசிரியர்கள், தையல் ஆசிரியர்களின் வழிநடத்தலில் ஐந்துமாத பயிற்சியின் நிறைவில் இவ்வாறானதொரு நிகழ்வை நடத்தியமையானது– இவர்களது முயற்சி வீண்போகவில்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இந்தக் கண்காட்சியும், மாணவர்களது அணுகுமுறையும் அநாதை சிறுவர்கள் வளர்க்கப்படும் நோக்கத்துக்குச் சரியான சான்றாக அமைந்தமையை திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்கத்தில் இடம் பெற்ற கண்காட்சியில் அவதானிக்க முடிந்தது.

தையல் ஆசிரியையாகப் பொறுப்புடன் சேவையாற்றிய மாலா மகாலிங்கம் எம்முடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை வாசகர்களுக்காக இங்கு தருகிறோம்.

இந்தக் கண்காட்சியானது – பயிற்சி பெற்ற மாணவர்களது திறமைவெளிப்பாட்டை வெளிக்கொண்டுவரும்முகமாக அமைந்துள்ளது. கண்காட்சி முடிவில் விற்பனை இடம் பெற்றமையானது, சங்கத்துக்கு சிறுவருமானத்தையும் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. இங்குள்ள பெண் பிள்ளைகள் 18 வயதுக்கு மேல் இங்கு இருக்கமுடியாது. தனியே அவர்களை கல்வியறிவுடன் வெளியே விடாது, தொழில் நிலைக் கல்வியையும் வழங்குவதன் மூலம் அவர்கள் வெளியே சென்று தனியாகவோ அல்லது ஒரு குழுவாகவோ, ஒரு தொழில் முயற்சியை மேற்கொள்ள முடியும். இதன் ஓர் அங்கமாகவே தையல் பயிற்சியைக் குறிப்பிடலாம்.

ஒரு வருடத்துக்கு மேல் பயிற்சி பெற்றால் தான் ஓரளவேனும் தையல் கலையை பழகிக் கொள்ள முடியும். கண்காட்சியில் பங்கு கொண்டவர்கள் தமது ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தி, சரியாக ஐந்து மாதங்கள் பயின்றே இந்த நிகழ்வை நடத்தியுள்ளனர். கழிவுப் பொருட்கள் மூலமாகவும் பல பயனுள்ள பொருட்களை வடிவமைத்துள்ளனர்.

எந்தவொரு பெண்ணுக்கும் எதிர்காலம் எப்படி அமையும் என்று சொல்ல முடியாது. தனக்கென ஒரு தொழிலைப் பழகிக் கொள்வதால், சுயமாக தனது காலில் நின்று செயற்பட முடியும். இதற்கு இவ்வாறான அமைப்புகளும், பின்னூட்டலாக இருப்பவர்களும் நன்றியுடன் நினைவுகூரத்தக்கவர்கள் எனத் தனது கருத்துக்களை நிறைவு செய்தார்.

தையல் ஆசிரியர் சின்னத்துரை – விஜயமதன் தனது கருத்துக்களை இவ்வாறு தெரிவிக்கிறார்.

ஐந்து மாத பயிற்சியின் மூலம், இவ்வாறான படைப்புக்களைக் கண்காட்சியில் வைத்து, எல்லோரது பாராட்டுதல்களையும் பெற்றமை, மாணவர்களது தளராத மனத்துணிவுக்கும், விடாமுயற்சிக்கும் கிடைத்த பரிசாகும். மாணவர்களதும், நிர்வாகத்தினதும் பூரண ஒத்துழைப்பாலேயே மிகக் குறுகிய காலத்தில் இவ்வாறானதொரு கண்காட்சி விற்பனையை மேற்கொள்ள முடிந்தது.

இவர்கள் பெற்றுள்ள பயிற்சியால் தொடர்ந்து இந்தநிறுவனத்துக்கான ஆடைகளை வடிவமைப்பதற்கான பொறுப்புக்கள் இவர்களிடம் நாளடைவில் ஒப் படைக்கப்படவுள்ளன. இதன் மூலம் இங்குள்ள பிள்ளைகள் தொழிலைத் தேடிக்கொள்வதுடன், தம்மாலான ஒரு சேவையையும் இந்தச் சங்கத்துக்கு வழங்கமுடியும். சிறுவர் இல்லங்களிலுள்ள தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து, இவ்வாறான தொழில் நிலைக் கல்விப்பயிற்சிகளை வழங்க வேண்டும் எனக்கூறித் தனது கருத்துக்களை நிறைவு செய்தார்.

சிவநாதன் சிவரஞ்சினி, ஜெயசீலன் மிதுலா ஆகிய இருவரும் தரம் ஒன்பதில் கல்வி கற்றபோதிலும், தையல் பயிற்சியை நிறைவு செய்த மனநிறைவை, முக மலர்வில் ஏத்திய வண்ணம் எம்முதுடன் சில கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். நாங்கள் நல்ல நிலைக்கு வரவேண்டும். இனியும் பிறரில் தங்கி வாழாது, எங்களால் இயலுமான தொழிலை மேற்கொண்டு, எம்மையும், எம்மைச் சார்ந்தவர்களையும் வழிநடத்த, இந்தத் தொழில்நிலைக் கல்வி எம்மைப் போன்றவர்களுக்கு ஒரு கொடையாகவே இருக்கிறது.

எமக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை ஒரு வரப்பிரசாதமாகவே கருதுகிறோம். சிறிது காலத்தின் பின்னர் இங்கு இருக்கமுடியாது. நாம் வெளியே சென்று தையல் தொழிலை மேற்கொள்வதற்கு – எமது சங்கம் கடன் அடிப்படையில் தையல் இயந்திரங்களை வழங்க முன் வந்தமை எமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

தனியே உணவையும், உடையையும் தந்து, கடமைக்காக கல்வியறிவைப் புகட்டாது, எம்மைப் பாதுகாத்து, எமக்கு நல்ல முறையில் சகலவசதிகளையும் தந்து இவ்வாறான தொழில் நிலைக் கல்வியை ஏற்படுத்திந்தந்தமை எங்களது எதிர்கால வாழ்வுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என இரு மாணவிகளும் கூறினர்.

தனியே சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதைவிட, இந்த நிறுவனம் இங்குள்ள சிறுவர்களைப் பல்துறைசார்ந்தவர்களாக வளர்க்கிறார்கள். இதற்கு நல்லதோர் உதாரணம் – இந்த மாணவிகளின் பாண்ட் வாத்தியக் குழுவினர். தூர நோக்கோடு சிறுவர்களை இணைத்து, அவர்களை நல்வழிப்படுத்தி, முழுமையாக்குவதன் மூலம் தம்மை பாதுகாத்துக் கொள்வதுடன் – குடும்பத்தையும், சமூகத்தையும் நல்வழிப்படுத்தி, செயற்படுத்தக் கூடிய பொறுப்பு மிக்கவர்களையும் உருவாக்குகின்றனர்.





பிரதேச செயலகரீதியாக கிராம சேவையாளர் மூலம் – தாய், தந்தையரை இழந்த அல்லது வறுமைக் கோட்டுக் குட்பட்டவர்களை இனங்கண்டு, அவர்களுக்குப் புதுவாழ்வும், புத்தொளியும் வழங்கிவரும் திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்கமும், சங்கம் சார்பானவர்களும் காலத்துக்கேற்ப நற்பணிகளை ஆற்றி வருகிறார்கள்.

தனவந்தர்கள், சமூக சேவையாளர்கள் இந்தநிறுவன செயற்பாடுகளுக்குப் பெரிதும் துணை நிற்கின்றனர்.

தேவை அறிந்து, சேவை செய்து வரும் இந்த நிறுவனத்தின் பணி சிறப்பானது மட்டுமல்ல மகத்தானதும் கூட. *

# வங்கிகளின் அட்டைகளும் அவற்றின் நன்மைகளும்

வங்கிகள் – தமது கிளைகளை நாடு பூராகவும் விஸ்தரித்து கணினி மயப் படுத்தப்பட்ட வங்கிச்சேவைகளை வழங்கி வருவதோடு வாடிக்கையாளர்களுக்குப் பிளாஸ்டிக் அட்டைகளையும், பல நன்மைகளையும் வழங்குகிறன. பிளாஸ்டிக் அட்டைகளின் சில வகைகள்.

1. கடனட்டை.
2. செலவட்டை.
3. டெல்லர் காட் அல்லது ஏ.ரி.எம் காட்.

கடனட்டை என்பது – வங்கியால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் இந்தக் காட்டை வங்கியால் இனம் காணப்பட்ட நிறுவனத்தில் காட்டி, எமக்குத் தேவையான பொருட்களைக் கடனுக்கு வாங்கமுடியும். 45 நாட்களுக்குள் பணத்தைச் செலுத்துதல் வேண்டும். செலுத் தினால் வட்டி அறவிடப்படமாட்டாது. வங்கி வியாபாரிகளுக்குரிய பணத்தை அவர் கணக்கில் சேர்ந்துவிடும். அல்லது காசோலை வழங்கி தீர்க்கும். காசு தேவைப்படும்போது கடனட் டைக்கு வங்கியில் பணம் பெற முடியும். உதாரணம் – வீசாக்காட், மாஸ்ரர்காட்.

**இந்தக் கடனட்டையின் நன்மைகளாக –**

1. கொள்வனவுக்காக காசுகொண்டு செல்ல வேண்டியதில்லை.
2. 45 நாட்களுக்குள் செலுத்தினால் கடனுக்கு வட்டியில்லை.
3. வியாபாரிகள் விற்பனையை அதிகரிக்கலாம்.
4. வியாபாரிகளுக்கு உடனே வங்கியிடமிருந்து பணம் கிடைத்துவிடும்.
5. வங்கிக்கு விற்பனையில் குறித்த வீதம் வருமானம் கிடைக்கும்.

செலவட்டை என்பது – வங்கியில் வைப்பிலிடும் பணத்தின் உச்ச அளவுக்கு ஏற்றவகை யில் வங்கியால் வாடிக்கையாளருக்கு வழங்கும் ஒருவகை அட்டை. இதனை வங்கியால் இனங்காணப்பட்ட வணிக நிலையத்தில் காட்டி– பொருட்கொள்வனவு செய்யலாம். இதன்போது எமக்கு சொற்பளவு இலாபம் கிடைக்கும்.

உதாரணம்:– செலான் வங்கி – செலான்அட்டை, சம்பத்வங்கி – சம்பத் அட்டை,

ரெல்லர் காட் அல்லது ஏ.ரி.எம் காட் என்பது (Automatted Teller Machine - ATM) வாடிக்கையாளர் தமது கணக்கில் இருந்து

01. பணத்தை எடுக்க
02. பணத்தை வைப்பிலிட
03. மீதியை அறிய
04. ஒரு கணக்கில் இருந்து இன்னொரு கணக்கிற்கு மாற்ற என்பன போன்ற செயற் பாட்டைப் புரிய வங்கியால் ஏற்படுத்திய இலத்திரனியல் சார்ந்த முறையாகும். இங்கு வாடிக்கையாளருக்கு வங்கியால் வழங்கிய இரகசியச் சொல்லை (PassWord) பாவித்து ATM இயந்திரத்தில் 24 மணித்தியாலமும் கொடுக்கல்வாங்கலைப் பெறலாம்.

உதாரணம் – வர்த்தகவங்கி – Cat Card.
இலங்கை வங்கி – Cey Bank Card Cash Point (Boc).
மக்கள் வங்கி – Pet Card.

**ரெல்லர் அட்டையின் நன்மைகள்**

வாடிக்கையாளர்களுக்கு வசதியான எல்லா நேரத்திலும், இரவிலும் பொது விடுமுறை நாளிலும் கூட கொடுக்கல்வாங்கலை இயந்திரமூலம் செய்யலாம். (365 நாளிலும் 24 மணிநேரமும் இந்தச் சேவையைப் பெறலாம்).

தி.சாரங்கன்

வவுனியா மாவட்டத்தில்

# பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்க வெகுஜன அமைப்புக்கள் அழைப்பு

மாவீரர் நாளை எழுச்சியுடன் அனுஷ்டித்துக்கொண்டிருந்தவேளை, கடந்த 25 ஆம் திகதி வவுனியா வேப்பங்குளத்தில் நடைபெற்ற இராணுவத்தினரின் கண்மூடித்தனமான செயலைக் கண்டித்து, வெகுசன அமைப்புக்கள் ஒன்றியம் தேசிய எழுச்சிப் பேரவை, தமிழீழ மாணவர் ஒன்றியம், வவுனியா தேசிய எழுச்சிப் பேரவை என்பன கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

எமது அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே! எமது இனத்தின் நிரந்தர விடுதலைக்காகத் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த வீர மறவர்களைப் போற்றிப் புகழ்ந்து, தீபமேற்றி, வித்துடல்கள் விதைக்கப்பட்ட இடங்களில் அவர்களின் இலட்சியத்தை இறுதிவரை உறுதியுடன் முன்னெடுப்போம் என்ற சபதத்தை மேற்கொள்ளும் நாள்தான் மாவீரர் நாள். இந்த மாவீரர்களின் நாளை எமது வடக்கு - கிழக்குப் பிரதேசம் எங்கும் எழுச்சியுடன் மக்கள் நினைவுகூர்ந்து கொண்டிருக்கும் போது இதைச் சகித்துக்கொள்ள முடியாத இலங்கை அரச படையினர், திட்டமிட்டு மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை, எமது மாவட்டத்தின் வேப்பங்குளம் பிரதேசத்தில் கடந்த 25 ஆம் திகதியன்று, எழுச்சி நிகழ்வுகளை நடத்திக்கொண்டிருந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், குண்டாந்தடிப் பிரயோகம் செய்யும் காயப்படுத்தி, இராணுவ கவச வாகனம் மூலம் எமது இனத்தின் தேசியக் கொடி ஏற்றப்பட்ட கம்பத்தை இடித்து அடாவடித்தனமாக நடக்கும் போது, மக்கள் எதிர்ப்புக்கு ஈடு கொடுக்க முடியாத அரச படையினர் கண்மூடித் தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து பல அப்பாவிப் பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டார்கள்.

இந்தச் சம்பவத்தை அறிந்த மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரியப்படுத்தி, உடன் சம்பவ இடத்துக்கு விரைந்தார். அவ் வேளையில் இராணுவ மேஜர்தர அதிகாரியாலும், சிப்பாய்கள் சிலராலும் துப்பாக்கி முனையால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

அவ்வேளை மக்களின் நிலையினை நேரில் பார்ப்பதற்கும் செல்லும் முகமாக இராணுவத்தினருடன் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருக்கும் போது, அந்த இடத்திற்கு வந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், பாராமுகமாகச் சென்றது எமக்கு இவர்களின் செயற்பாடு தொடர்பாக ஐயம் கொள்ள வைத்ததோடு, எமது பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையையும் ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், எமது வவுனியாவாழ் மக்களை நம்பி தேசியத் தலைவரால், அரசியல் பணிக்காக அனுப்பப்பட்ட போராளிகளின் தன்மானம் பறிக்கப்படுமானால், நிச்சயமாக ஒருபோதும் தமிழினம் பொறுமையுடன் இருக்கப் போவதில்லை. இதனைச் சர்வதேசமும் அரசும் புரிந்துகொள்ளவேண்டும்.

ஏனெனில், அண்மை நாட்களில் யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டமை, மதகுரு காயப்படுத்தப்பட்டமை, இதேபோன்று திருகோணமலையிலும் எமது மக்கள் மீது இராணுவத்தினரால், மிலேச்சத்தனமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து இறுதியில் மனிதர்களைக் கடிக்கும் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, கொரூரமான செய்ல்களைச் செய்யும் அரச படையினருக்கு, உடனடியாக சட்ட நடவடிக்கை எடுப்பதோடு, பாதிக்கப்பட்ட அனைத்து அப்பாவிப் பொதுமக்களுக்கும் அரசு நட்டஈடு வழங்க வேண்டும்.

இவ்வாறான தாக்குதல்கள் தொடர்ந்தும் எம்மீது நடத்தப்படுமானால், எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு எமது போராட்டங்கள் தொடரும். இதன் ஒரு கட்டமாக இன்று வவுனியா மாவட்டத்தில் முழுமையான பூரண ஹர்த்தாலுக்கு அனைத்து மக்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்வதுடன், எமது சிங்கள சகோதரர்களையும் எமது நியாயமான போராட்டத்துக்கு பூரண வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குளங்கள் புனரமைப்பு முடியாத நிலையில்

கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைக்கப்பட்டுவரும், குளங்கள் புனரமைப்புப் பணிகள், நிறைவடையாத நிலையில் உள்ளன.

கிளிநொச்சி கனகபுரக்குளம், பல்லவராயன்கட்டுக் குளம், கரிகன்பிட்டி குளம், ஊரியன் குளம் என்பன தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் புனரமைப்புப் பணிகள் யாவும் இந்த ஆண்டின் இறுதிக்குள் முடிவடைய வேண்டிய நிலையிலுள்ளன.




# மருதம் வாணிப நடுவப் பணியகத்தில் காவல்துறையினரின் கருத்தூட்டல்!

தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவினரால் கிளிநொச்சியில் அமைந்துள்ள மருதம் வாணிபங்களின் நடுவப் பணியகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் மருதம் வாணிபப் பொறுப்பாளர் இயல்வாணன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வாகனப் போக்குவரத்துப் பொறுப்பாளர் சிவகுமாரனால் வீதி ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பான கருத்துக்களையும், பாதசாரிகள், துவிச்சக்கரவண்டி ஓட்டுனர்கள், வாகனச் சாரதிகள், ஆகியோருக்கு - வீதியில் போக்குவரத்துச் செய்யும்போது கடைப்பிடிக்கும் விதி முறைகள் தொடர்பாகவும், விபத்துக்கள் வராமல் தடுப்பது தொடர்பாகவும் கருத்துக்களை வழங்கினர்.

இந்தக் கலந்துரையாடலில் மருதம் வாணிபங்களில் பணியாற்றும் பணியாளர்கள், வாகனச்சாரதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது ஏ 9 பிரதான வீதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பான புகைப்படங்கள் காண்பிக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பான கருத்துக்களை மருதம் வாணிபத்தில் பணியாற்றும் கதிரவேலு பூபதிராசா நிகழ்த்தினார்.

# பொருண்மிய மதியுரையகத்தினால் சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டன!

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு பொருண்மிய மதியுரையகத்தால் - கல்வியைப் பெறும் பொருட்டு, மின்சார வசதியற்ற மாணவர்களுக்கு - சூரிய மின்கலம் கடந்த செவ்வாய்க்கிழமை ஒட்டுசுட்டான் பொருண்மிய மதியுரையகத்தில் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை ஜேர்மன் ரெக் நிறுவனத்தைச் சேர்ந்த கருணாகரன் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன் ஏற்றிவைத்தார்.

மாவீரர்களின் திருவுருவப்படத்துக்கு, முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளார் முகுந்தன் மாலை அணிவித்தார். 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் திருவுருவப் படத்துக்கான மாலையை முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அணிவித்தார்.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை துணுக்காய் வலயக்கல்விப் பொறுப்பாளர், பாலிநகர் வித்தியாலய அதிபர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

நிகழ்வின் சிறப்புரைகளை முல்லைத்தீவு மாவட்ட அரசியற் பொறுப்பாளர் முகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர், துணுக்காய் வலயக் கல்விப் பிரதிப் பணிப்பாளர் முரளிதரன், ஜேர்மன் ரெக் பிரதிநிதி கருணாகரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிறுவனத்தினால் - திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள திலீபன் மருத்துவமனைகளில் - மின்சார வசதியின்மையால் இரவு வேளைகளில் வரும் அவசர நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதிலுள்ள சிரமங்களை தவிர்க்கும் முகமாக மூன்று சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டன.

இதனைத் திலீபன் மருத்துவமனைகளின் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழ்மாறன் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் - பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன், பணிப்பாளர் சுந்தரமூர்த்தி, ஜேர்மன் ரெக்கை சேர்ந்த வி.கருணாகரன், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், ஜப்பானைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஏரிக், கனடா ரெக்கைச் சேர்ந்த விஸ்வா, லண்டன் ரி.ஆர்ரெக்கைச் சேர்ந்த ரகுவப்பா, செல்வரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஸ்கந்தபுரம் கோணாவில் வீதி போக்குவரத்துக்குத் தடை

(ஸ்கந்தபுரம்)

கோணாவில் ஸ்கந்தபுரம் வீதியால் போக்குவரத்துச் செய்வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

அண்மையில் பெய்து வரும் கடும் மழையால வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால் பல நாட்களாக போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. ஆனால் தற்போது வெள்ளம் பாய்வது குறைவடைந்த நிலையிலும், வீதியில் சுமார் 100 மீற்றர் நீளமான பாரிய கிடங்காக காணப்படுகின்றது.

இதனால் வாகனங்களின் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், இந்த வீதியைத் திருத்தித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை மக்கள் கேட்டுள்ளனர். (ஸ்ரீ)

முழங்காவில் பிரதேசத்தில்

# கட்டாக்காலி கால்நடைகளை ஏலத்தில் விடத் தீர்மானம்!

முழங்காவில் பிரதேசத்தில் கிராஞ்சி, குமுழமுனை ஆகிய கிராமங்களில் பயிர்களை அழிவு செய்த கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டு, இந்தப் பிரதேச பொதுமக்களால் அடைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கால்நடைகள் பல நாட்களாக உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுவதால், இவற்றை ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால்நடைகளின் உரிமையாளர்கள் எதிர்வரும் 06 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் முழங்காவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இல்லையேல் குறித்த திகதியில் கால்நடைகள் ஏலத்தில் விடப்படவுள்ளதாக, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

# மீளக்குடியமர்ந்த 500 குடும்பங்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் செம்பியன்பற்று வடக்கு செம்பியன்பற்று தெற்கு மருதங்கேணி கிராம அலுவலகப் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்த 238 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வு நிவாரணம் 25 ஆயிரம் ரூபா கடந்த வாரம் மருதங்கேணி சமுர்த்தி வங்கிச் சங்கம் மூலம் வழங்கப்பட்டது.

வத்திராயன் தொடக்கம் சுண்டிக்குளம் வரை எட்டுக் கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்த சுமார் 500 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வு நிவாரணம் 25 ஆயிரம் ரூபா பெறுவதற்குரிய படிவங்களில் இந்த வருடம் தை மாதத்தில் கையொப்பமிட்டு 12 மாதங்கள் முடிந்த நிலையிலும் இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்படாமை குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் அகதிவாழ்க்கை வாழ்ந்து சொல்லொணத் துன்பங்களை அனுபவித்து 12 வருடங்களின் பின்னர் சொந்தக் கிராமங்களில் குடியேறியுள்ள மக்கள் தமக்குரிய உதவிகளை அரசாங்கமும் அரச அதிகாரிகளும் வழங்க உரிய நடவடிக்கைகளை எடுக்காதது குறித்து கவலை தெரிவித்தனர்.

(21)





போர்ப்பறை வெளியீட்டகத்தினால் தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்களான - தப்பியவன் நூலை போராளி சந்திரமதி வெளியிட்டுவைக்க படைத்துறையைச் சேர்ந்த தினேஸ் மாஸ்டர் பெற்றுக் கொள்வதை முதலாவது படத்திலும் ஸ்கோர்ஸனின் சிறப்பு நடவடிக்கைகள் நூலை போராளி கதிரவள் வெளியிட்டு வைக்க கேணல் யாழினி (விதுஷா) பெற்று கொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வகைஅறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்*
*பகைவர்கண் பட்ட செருக்கு*

திருக்குறள்

# நமது நோக்கு

## கேள்விக்குறியாகிவரும் போர்நிறுத்த உடன்பாடு

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர்நிறுத்த உடன்பாடு செயலிழக்கும் அபாய கட்டத்தை எட்டியுள்ளதாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் ட்ரொன் புறுவ் ஹொவ்டே எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளமையானது - சமாதானம் விரும்பிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ள தென்றே கூறவேண்டும்.

அவர் சொல்லவேண்டியதை - சொல்லவேண்டிய சமயத்தில் அறியவேண்டியவர்கள் அறியும்வண்ணம் கூறியிருக்கிறார்.

இதன்மூலம் அவர் தெரிவிக்கவிரும்பிய முக்கிய விடயம்- சமாதான சூழலின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டது. அதனைத் தொடர்ந்தும் பாதுகாக்க தங்களால் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதே ஆகும்.

இத்தகையதோர் அபாயமான நிலை சமாதான முயற்சிகளுக்கு வரும் என்பது - புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்றபோதே பலரும் தீர்மானித்துக்கொண்ட விடயமாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து நோர்வே அரசின் அனுசரணையுடனும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் மேற்கொள்ளப்பட்டுவந்த சமாதான முயற்சிகள் யாவும் - அப்போதைய அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுவந்த புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டின் அடித்தள வலிமையில் தான், இன்றுவரை உறுதியாக எத்தனையோ இடர்கள், அழுத்தங்கள், நெருக்கடிகள், எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இருந்து வருகிறது என்று கூறினால் மிகையில்லை.

இந்தப் போர்நிறுத்த - புரிந்துணர்வு உடன்படிக்கைகளை ஆரம்பம்முதலே எதிர்த்து, சமாதான முயற்சிகளையும் அங்கீகரிக்க மறுத்துநின்ற பேரினவாத - போர்வெறிகெண்ட மேலாதிக்க சக்திகளே இன்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ளனர்.

மக்களின் அங்கீகாரத்துடன் சமாதான முன்னெடுப்புக்களில் ஆரம்பத்தில் தீவிரமாக இயங்கிவந்த ஐக்கிய தேசிய முன்னணியில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை ஜனநாயகப் பண்புகளுக்கு முரணான வகையில் சட்ட பூர்வமான அரசியல் சதியொன்றை திட்டமிட்டு நடத்தியதன் மூலம் கலைத்த ஜனாதிபதியின் உள்நோக்கம் - அமைதி முயற்சிளைச் சீர்குலைத்து மீண்டும் போர்ச்சூழலை உருவாக்குவதே ஆகும். இதில் இரண்டாவது கருத்துக்கே இடமில்லை.

அதுவும் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்த யோசனைகள் அரசிடம் கையளிக்கப்பட்ட சமயத்தில், அதுவும் பிரதமர் நாட்டில் இல்லாத சந்தர்ப்பம் பார்த்தே ஜனாதிபதி அரசாங்கத்தைத் தனது சர்வாதிகார வலுவைப் பயன்படுத்திக் கலைத்தார் என்பதையும் இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும்.

இந்த ஆட்சிக் கலைப்புச் சம்பவத்திற்கு ஆயிரம் காரணங்களைக் கூறி ஜனாதிபதி நியாயப்படுத்த முயன்றாலும், உண்மைக்காரணம் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் பேரினவாத நோக்கமேயாகும்.

தேர்தலில் புதிய அரசு பதவியேற்றதும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க நோர்வேயை ஜனாதிபதி அழைத்தது ஒரு கண்துடைப்பு நடவடிக்கையென்றே கூறவேண்டும். அப்படி ஜனாதிபதிக்கு சமாதானத்தின் மீது அர்ப்பணிப்புடன் கூடிய விசுவாசம் இருக்குமேயானால் - புதிய அரசு அமைக்கப்பட்டு இந்த ஐந்து மாத காலத்திற்குள் அந்த முயற்சிகளில் அரை அங்குலம் தானும் முன்னேற்றத்தைக் காட்டியிருக்க முடியும்.

ஆனால், ஆரம்பம் முதலே சமாதான நகர்வுகளின் எதிர்காலம் குறித்த கடுகளவு நம்பிக்கையைத் தானும் ஜனாதிபதியால் தரமுடியவில்லை... தரும் மனமும் அவருக்கில்லை. அப்படிச் சொற்ப அளவு விருப்பம் இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்த அவரது போரினவாத சமாதான எதிர்ப்புத் தோழர்களான பங்காளிகள் அனுமதிக்கவும் மாட்டார்கள்.

அவரது பங்காளித் தோழர்களின் அச்சுறுத்தல்களுக்கு முன்னர் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார பலம்கூடப் பலவீனமாகிப்போயுள்ளது.

இந்த நிலையில் அரசும், ஜனாதிபதியும் - யுத்த கோஷமும், சமாதான கோஷமும் போடுபவர்களாக தொடர்ந்தும் இருக்கப்போகிறார்கள் என்பதே இன்றைய அரசியல் யதார்த்தம்.

தொடரும் வன்முறைச் சம்பவங்கள், அரச மற்றும் அரச சார்பு ஊடகங்களில் விடுதலைப் புலி எதிர்ப்புடன் கூடிய மூன்றாந்தரப் பிரசாரங்கள் படைத்தரப்பினரின் போர்நிறுத்த மீறல்கள் மற்றும் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான சக்திகளை அரவணைத்து போஷிக்கும்தந்திரோபாய செயற்பாடுகள் எல்லாவற்றையும்விட நாட்டு மக்களையும் சர்வதேச சமூகத்தையும் சமாதான வாய்ச்சவடால் அடித்தே ஏமாற்றிக் காலம்கடத்தும் மூலோபாயம் அனைத்தும் சமாதானம் மீதான நம்பக்கையை முற்றாக இழக்கவைத்தே விட்டன.

பொறுமைக்கு மட்டுமல்ல, வரட்டு நம்பிக்கைகளுக்கும் ஒரு எல்லை இருக்கவே செய்கிறது. தமிழ்மக்களைத் தொடர்ந்தும் அரசு ஏமாற்ற முயல்வது தனக்குத்தானே மண் அள்ளிப் போடும் செயலாகவே இருக்கும். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரின் எச்சரிக்கையும் இதனை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது எனலாம்.

# நாடும் நடப்பும்




# சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)

இடை நடுவில் நின்று போயுள்ள சமாதானப் பேச்சுக்களை மிக விரைவில் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பே என, ஐ.தே.க.கட்சித் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமையன்று கொழும்பில் நடைபெற்ற பியகம லயன்ஸ் கழகத்தின் 26 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு பேச்சுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பேசுகையில்-

கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த உடனேயே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கோடு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தது. ஆனால், அந்தச் சமாதானப் பேச்சுக்கள் தற்காலிகமாக இடைநடுவில் நின்றது. ஆனால், மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவில்லை.

தற்போது மீளவும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு காலம் குறிப்பிடப்படவில்லை. ஆனால், சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்காமல் இழுத்தடிப்புச் செய்வது நல்லதல்ல. அதனால் நாட்டில் மீண்டுமொரு குழப்பநிலை தோன்ற வாய்ப்புள்ளது. ஆகையால், நின்றுபோயுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாரும் எதிர்பார்க்காத நிலையில் கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கலைக்கப்பட்டது. இவ்வாறு அரசாங்கத்தைக் கலைக்காதுவிட்டிருந்தால், சமாதானப பேச்சுவார்த்தை நீண்ட தூரத்துக்குப் போயிருக்கும். அதன்மூலம், பிரதிபலன்கள் பலவற்றை மக்கள் இப்பொழுது பெற்றுக் கொள்ளமுடிந்திருக்கும். இதுபற்றி மக்களுக்கு இப்பொழுது விளங்கியுள்ளது. ஆகையால் மக்களது தற்போதைய எதிர்பார்பானது - சமாதானப் பேச்சுவார்த்தை எப்போது ஆரம்பிக்கும் என்பதே.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்பு யுத்தத்தை நிறுத்த எம்மால் முடிந்தது. அதனால இப்பொழுது இடத்துக்கிடம் குண்டுகள் வெடிப்பதில்லை, வெடிச்சத்தம் கேட்பதில்லை, வடக்கிலிருந்து - தெற்குக்கு சவப்பெட்டிகள் வருவதில்லை. மக்களது மனங்களில் யுத்தபயம் அகன்று போயுள்ளது. இந்த வகையில் நாட்டை சரியான பாதையில் ஈடுபடுத்துவதற்கு எமக்குப் பலம் கிடைத்தது.

இனறு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டுமெனச் சொல்லப்படுகிறது. ஆனால், இந்த நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் விதமாக நாம் அதுபற்றிக் கலந்துரையாட வேண்டியுள்ளது. உண்மையில் அந்த இறுதித் தீர்வு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளவேணடிய ஒன்றாக இருக்க வேண்டும். அதன்படி இந்த நாட்டில் நிரந்தரமான சமாதானத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். இது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# கோப்பாய் பிரதேச அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு

கோப்பாய் பிரதேச செயலகத்தின் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் குறிப்பாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை, கோப்பாய் மகாவித்தியாலயம், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி, ஆவரங்கால் மகாஜன பாடசாலைகளுக்கும் மற்றும் பொது விளையாட்டு மைதானங்கள், சனசமூக நிலையங்களின் புனரமைப்பு மற்றும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல், பாலர் பாடசாலைகளின் அபிவிருத்தி, மயானப் புனரமைப்பு போன்றவற்றிற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், இடைக்காடு மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைக்கு பான்ட் வாத்திய கருவிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கோப்பாய் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதிகளில் 61 திட்டங்களுக்கு நிதியாக 4981850 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தின் இந்தத் திட்டங்களில் அதிகப்படியானவை நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனால் முன் மொழியப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளது. (90)

# இளைஞரைக் காணவில்லை தந்தை முறைப்பாடு!

(யாழ்ப்பாணம்)

இளைஞர் ஒருவர் காணமல் போயுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரி வீதி, சரஸ்வதி அம்மன் கோவிலடி, அச்சுவேலியைச் சேர்ந்த கந்தலிங்கம் சிவனேசன் (வயது - 26) என்னும் இளைஞரே காணமற்போனதாக இவரது தந்தையாரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 23 ஆம் திகயிலிருந்து இவர் காணமற்போயிருப்பதாகவும், முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# மனித உரிமை பேணும் அமைப்பினர் நேற்று குடாநாட்டுக்கு விஜயம்

ஆசிய பசுபிக் நாடுகளுக்கான மனித உரிமை பேணும் அமைப்பின் பிரதித் தலைவர் பில் டர்ஜா தலைமையிலான குழுவினர் நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு, போரினால் பாதிக்கப்பட்ட இடம் பெயர்ந்த மக்களின் மனித உரிமைகள் தொடர்பாக ஆராய்ந்தனர்.

யாழ்.குடாநாட்டிற்கு வருகைதந்த ஆசிய பசுபிக் நாடுகளுக்கான மனித உரிமை பேணும் அமைப்பினர், காலை யாழ். செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, தெல்லிப்பளை ஆகிய பிரதேச செயலர்களைச் சந்தித்து இடம் பெயர்ந்த மக்க்ளின் மனித உரிமை தொடர்பாக ஆராய்ந்தனர். அப்போது யாழ். குடாநாட்டில் ஒரு பகுதி மக்கள் மீளக் குடியமர முடியாத நிலையில் இருப்பதாகவும், இடம் பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களுக்கு முழுமையான புனர்வாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், பலர் கல்வி அறிவை பெறுவதில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் நேற்று யாழ் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து யாழ். மாவட்ட மனித உரிமைகள் தொடர்பாக ஆராய்ந்தனர். இதற்கு முன்பு இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகளுக்கும் இவர்கள் சென்று மனித உரிமைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எயிட்ஸ் ஒழிப்பு நாள்...

- சந்துரு

# தனிமரம் தோப்பாவதில்லை தனிமரங்கள் இன்றி தோப்புமில்லை

*(நேற்றைய தொடர்ச்சி...)*

இதில் 346 ஆண்களும் 245 பெண்களும் அடங்குவது குறிப்பிடத்தக்கது. இதே காலப்பகுதியினுள் இந்த நோயால் 129 பேர் உயிரிழந்துள்ளனர். என இலங்கை தேசிய எயிட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்ட அமைப்பு கூறுகிறது. 1995 களில் அன்றைய சுகாதார பெருந்தெருக்கள் சமூகநல



அமைச்சு அனுசரணையுடன் இலங்கை எயிட்ஸ் - மேக நோய்த் தடுப்புத் திட்டமும், யுனிசெப்பும் இணைந்து வெளியிட்ட கைநூல் ஒன்றில் 2000 ஆம் ஆண்டளவில் இலங்கையில் எச்.ஐ.வீ. தொற்றியோர் எண்ணிக்கை 17000 ஆகவும், எயிட்ஸ் நோயாளிகளாக 1750 பேர் இருப்பர் எனவும் எதிர்வு கூறப்பட்டிருந்தது. அதேவேளை 1995 நடுப் பகுதிவரை இலங்கைளில் எச்ஐவி தொற்றியோர் 160 பேர் இனங்காணப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தரவுகளது அடிப்படையில் நோக்கும்போது, 1986 முதல் 1995 வரையில் எயிட்ஸ் நோய்க்கு ஆட்பட்டோர் 160 பேராகவும், 1996 முதல் 2004 நடுப்பகுதிவரையான காலப்பகுதியிலான சுமார் ஒன்பது வருட காலத்துள் எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை 431 ஆகவும் கணிப்பிட்டறிய முடியும். ஆய்வு நோககிற்காக கணிப்பீட்டு அடிப்படையில் ஆராயும் போது, 1986 - 1995க்கு இடைப்பட்ட காலத்தில் வருடம் ஒன்றுக்கு 16 பேர் என இருந்த எயிட்ஸ் நோயாளரது எண்ணிக்கை 1996 - 2004 காலப் பகுதியில் வருடம் ஒன்றுக்கு 48 பேர் என்ற அளவீட்டில் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இதேபோன்றே எச்.ஐ.வீ. தொற்றுக்கு உட்பட்டு இதுவரை அடை யாளம் காணப்படாதவாறு எங்க ளுடன் உலாவி வருபவர்களது தொகையும் பல ஆயிரங்களைத் தாண்டியிருக்கலாம். 1995 களில் யுனிசெப் கணிப்பிட்டதனைப் போல இது 17000 ஐத் தாண்டி இருக்கக்கூடிய ஏது நிலைகளே காணப்படுகின்றன.

**யாழ்.குடாநாடும் எயிட்ஸும்**

எமது தாயகப் பிரதேசத்தைப் பொறுத்தவரை, இலங்கைத் தீவில் எயிட்ஸ் நோயாளி அடையாளம் காணப்பட்டு சுமார் ஏழு வருடங்களின் பின்னராக யாழ்.குடாநாட்டில் 1993 இல் முதலாவது எயிட்ஸ் நோயாளி அடையாளம் காணப்பட்டார். இவர் வெளிநாட்டில் இருந்து மீண்டு வந்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்று முதல் 2004 வரையான காலப்பகுதியினுள் 29 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் இருபது பேர் இதுவரை இறந்து விட்டதாக குடாநாட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

இதேபோல் சுமார் 500 பேர் வரையில் காவிகளாகத் திரியக்கூடும் என எதிர்பார்ப்பதாகவும், இந்த மாவட்டத்தில் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடும் தொண்டர்கள் ஊகிக்கின்றனர். இவ்வாறு ஊகிப்பதற்கு எமது பிரதேசங்களின் கிராமிய மட்டங்களில் பல்வேறு தரப்பினரையும் தாம் சந்தித்து, அவர்களோடு உரையாடிப் பெற்ற அனுபவங்களே அடிப்படையாக அமைவதாக அவர்கள் கூறுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் 1993 களில் முதலாவது எயிட்ஸ் நோயாளி இனங் காணப்பட்டிருப்பினும், மக்கள் மத்தியில் இது தொடர் பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கை கள் 2001 ஆம் ஆண்டிலி ருந்தே ஓரளவு திட்டமிட்ட முறையில் முன்னெடுக் கப்பட்டு வருவது குறிப் பிடத்தக்கது.



இந்த வகையிலான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சுகவாழ்வு நிறுவனம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை என்பன தொடர்திட்டங்களாகவும், சமூக செயற்பாட்டு மையம், கியூடெக், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், போரூட் என்பன குறுகிய கால சிறு சிறு திட்டங்களாகவும் செயற்படுத்தி வந்துள்ளன.

இவற்றுள் போரூட் தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் அனைத்துமே உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களாக இருப்பதால், போதுமான நிதி வசதி இன்மை காரணமாகத் தொடர்ந்தும் இந்த விழிப்புணர்வுச் செயற் திட்டங்களை முன்னெடுப்பதில் தடைகளை எதிர்நோக்கியிருப்பதும் சுட்டிக் காட்டத்தக்கதே.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தைப் பொறுத்தவரை - ஆரம்பத்தில் யுனிசெப் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடனேயே எயிட்ஸ் விழிப்புணர்வுச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருப்பினும், தற்பொழுது அவர்கள், எமது சமூகத்தினது நிதிப் பங்களிப்பைத் திரட்டிக் கொள்ளும் நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தேச நலனில் அக்கறை உள்ள ஒவ்வொரு மனிதருமே இந்த வகையான முன்னெடுப்புக்களுக்கு உதவ வேண்டிய பொறுப்பைத் தன்னிடத்தே கொண்டுள்ளதை மறுக்கமுடியாது.

பண்பாட்டு விழுமியங்கள், பழமைமிகு மத ஒழுக்க நெறிகள், கல்வி அறிவுமிக்க சமூகம் என்றவாறான அணிகலன்களால் அழகுபடுத்தப்பட்டு நாகரீகமான ஒரு சமூகமாக மதிக்கப்பட்ட எமது குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரை, கடந்த இரு தசாப்தத்துக்கும் மேற்பட்ட காலப் போரால், ஓரளவு கட்டப்பட்டிருந்த நிலைகள், சுமார் மூன்று வருடத்துக்கு முன் ஏற்பட்டு விட்ட சமாதானச் சூழல் என்ற மாய நிலை காரணமாக மாற்றமடைய, அடங்கியிருந்த இளைஞர் சமூகத்தின் பெரும்பாலானவர்கள் அணை உடைத்த வெள்ளம்போல திக்குத் திசை தெரியாது தறிகெட்டுத் திரியும் ஒரு ஆரோக்கியமற்ற சூழல் எமது தேசத்தில் ஏற்பட்டுவிட்டது.

அத்தோடு, வியர்வைத்துளியின் வேதனை அனுபவம் இல்லாமலேயே கைநிறையக் கிடைக்கும் வெளிநாட்டுப் பணமும், அவற்றைக் கொண்டு அனுபவிக்கக் கூடியதாயிருக்கும் இலத்திரனியல் ஊடக வசதிகளும், எமது இளம் சந்ததியினரை எவ்வளவுக்கு பாழ்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு பழுதாக்கி விடுகின்றன.

எந்த ஒரு நிலையிலும், அங்கே உள்ள நல்ல அம்சங்கள் எம்மைக் கவருவதைவிட, தீய விடயங்களால் நாம் கவரப்படுவது வேகமானதாகவும், அதிகமானதாகவும் அமைந்து விடுவது இயற்கையே. இங்கும் அதே நிலையே ஏற்பட்டுள்ளது. இதன் விளைவுகள் குடாநாட்டின் ஒவ்வொரு மூலையிலும் எரிமலைகளாக, புகைந்து கொண்டிருக்கிறதென்பது - சமூக சேவைகளில் ஈடுபட்டிருக்கும், சேவையாளர்கள் பலரதும் கருத்தாகும். மனித உணர்வுகள் என்பது இறங்குவரிசையில் வந்து தற்போது மிருக உணர்வின் எல்லைக் கோட்டைத் தொட்டு நிற்கும் சம்பவங்களை, கேட்டறிந்த அனுபவங்களாக அவர்கள் முன்வைக்கும்போது, இதேநிலை இன்னும் சில வருடங்கள் தொடருமாயின் எயிட்ஸ் என்பது எமது வீட்டு வாசலைத் தள்ளித்திறந்து விட்டு உள்ளே வந்து குந்திக்கொள்வது தவிர்க்க முடியாததாகி விடும் என்ற பயமே இந்தக் கட்டுரையை நான் எழுதத் தூண்டியது.

**விழிப்புணர்வை - அடைவோம் - ஏற்படுத்துவோம்**

எமது தேசத்தினது - தேசத்தின் இளம் சந்ததியினது கட்டுக் கோப்பை அவர்கள் வாழ்விலக்கை திட்டமிட்டுச் சிதைப்பதில் பேரினவாதம் மறைவாக, ஆனால் மிக நேர்த்தியாக செயற்பட்டு வருவதை நாம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். ஆபாசப் பட சிடிக்களும், போதைவஸ்த்துக்களும் ஏதோ ஒரு விநியோக வழி முறைக்கூடாக ஊரினுள் ஆங்காங்கே உலாவி வருவதைக் கேட்டறிய முடிகிறது.

இவற்றால் தடுக்கி விழுத்தப்படும் இளைஞர்கள் நெறிமுறையற்ற பாலியல் தொடர்புகளுக்கு தூண்டப்படுகின்றனர். 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கூட இவ்வாறான அனுபவங்களை நூற்றுக்கு மேற்பட்ட தடவைகள் அனுபவித்திருப்பதாக, சமூக சேவைத் தொண்டர்களிடம் ஒப்புதல் அளித்திருப்பது - தட்டிக்கழிப்பதற்கான ஒரு விடயமாக இது இல்லை என்பதைச் சுட்டுகிறது.

எயிட்ஸ் என்பது தனியே பாலுறவால் மட்டும் பரவும் நோய் இல்லை என்பது உண்மைதான். ஆனால், இலங்கையல் இனங்காணப்பட்ட எயிட்ஸ் நோயா ளிகளுள் 84.9 வீதமானவர்கள் ஆண் - பெண் பாலுறவு நடத்தைகள் மூலம் தொற்றுக்குள்ளானவர்கள் என்பதே உண்மையாகும். தன்னினச் சேர்க்கை மூலம் 13.9 வீதமானவர்களும், இரத்தத்தின் மூலம் 1.6 வீதமானவர்களும்,' தாயிடமிருந்து குழந்தைக்கு என்ற வகையில் 0.8 வதமானவர்களும் எயிட்ஸ் நோய்க்கு உட்பட்டமை பற்றிய தரவுகள், எமக்கு இந்த முடிவையே தருகின்றன.

வருமுன்காப்பது என்பது எந்த அளவுக்கு முக்கியமோ, அதே போன்றே வந்தவரைக் காப்பதும் முக்கியமான ஒரு நடத்தையாகும். உள ஆரோக்கியம் உள்ள எந்த ஒரு மனிதனும் தனது உயிரை பெறுமதியற்ற வகையில் இழக்கத்துணியமாட்டான். ஒருவர் எச்ஐவி வைரஸ் தொற்றுக்கு உள்ளாகின்றார் எனின், அது அவரைப் பொறுத்து ஒரு விபத்தாகவே அமைந்து விடுகிறது.

அந்த விபத்தின் அதிர்வு - சமூகத்தைத் தாக்க இடமளிக்காதிருப்பதில் அக்கறை செலுத்தும் சம நேரத்தில், விபத்துக்குட்பட்டவரது உளமேம்பாட்டைக் கருத்தில்கொண்டு செயற்படுவதும் அவசியமானது. எனவே நாம் முன்னெடுக்கக் கூடிய எந்த ஒரு விழிப்புணர்வுச் செயற்திட்டமும், பாதிக்கப்பட்டவர்களை அரவணைத்துச் செல்வதாகவே இருக்க வேண்டியது அவசியமாகும். இங்கு மையப்படுத்த வேண்டியவர்களுள் பாதிக்கப்பட்டவர்களது நெருங்கிய உறவினர்களையும் உள்ளடக்குவது மிக மிக அவசியமாகிறது.

பொதுவாகவே எமது பிரதேசத்தில் கல்வி நிலையும், பொருளாதார வளமும் மேம்பட பலிடமும் சுயநலம் மேலோங்குவதை கண்டறிய முடிகிறது. "நமக்கெதற்கு வீண் பிரச்சினை" என நாகரீகமாகக் கூறியபடி, சமூகப் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்குவதே இன்று பலரதும் - பண்பான நடத்தைகளாக மாறிவிட்டன. எந்தப் பிரச்சினையும் எனது வீட்டுக் கதவைத் தட்டாதவரை அது பிரச்சினை அல்ல என்பதே எம்மில் பலரதும் நிலை. எயிட்ஸ் நோயைப் பொறுத்தவரை அது எமது கதவைத் தட்டும்போது, எமக்குரிய புதைகுழிகளை ஏற்கனவே வெட்டி விட்டு வந்தே கதவைத் தட்டுகிறது என்பதை நாம் உணரவேண்டும்.

தனிமரம் தோப்பாகாது என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில், தனிமரங்களது கூட்டமே தோப்பு என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நாம் அனைவருமே தனி மனிதர்கள் தானே என நினைத்து, ஒதுங்கிவாழ முயலும்போது, ஒட்டு மொத்த சமூக மேம்பாடு என்பது ஏற்பட்டுவிடாது.

இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன் எமது தேசியத் தலைவரின் சுயநலத்தோடு மட்டுமே வாழ முற்பட்டிருந்தால், இன்று ஈழத் தமிழினம் தன்னுரிமையிழந்து, தனித்துவத்தை சிதறடித்துவிட்டு, ஏதோ ஒன்றோடு கலந்து அழிந்திருக்கும்.

கப்டன் மில்லர் தன் நலத்தைப் பற்றியே சிந்தித்திருந்தால் வடமராட்சி எப்பொழுதோ பாலைவனமாகியிருக்கும். ஆறுமுக நாவலர் அன்று சைவத்தையும், தமிழையும் வளர்க்க முன்வராவிட்டால், இன்று அவற்றின் நிலைமைகள் எப்படி இருந்திருக்கும் எனச் சிந்தித்துப் பார்ப்போம்.

காலத்துக்குக் காலம் சமூக நன்மை கருதி, இனப் பாதுகாப்பு கருதி, சாதாரண மனிதர்கள் செயற்பட முனையும்போது - அவர்கள் மாமனிதர்களாக, மகாபுருஷர்களாக போற்றப்படுகிறார்கள். எனவே, இன்றைய எமது சமூக உறுப்பினர்களும் - தத்தமது சமூக நன்மை கருதி, முடியுமானால் தாங்களாகவே செயற்பாடுகளில் இறங்கி செயற்படுதல் வேண்டும்.

முடியாதபோது ஆர்வத்தோடு, களத்தில் இறங்கி செயற் பட முன்வரும் அன்பு நெஞ்சங்களுக்கு தடைகளை ஏற்படுத்தாது வழிவிட்டு, விலகி ஒதுங்கி நின்று ஊக்கப்படுவத்துவதே பெரிய உதவியாக இருக்கும்.

## ஈழத்து இலக்கிய உலகின் ஒரு நட்சத்திரம் மறைந்து விட்டது



புத்தொளி நா.சிவபாதம்

ஈழத்து இலக்கிய உலகின் சுடர் விட்டுப் பிரகாசித்த ஒரு நட்சத்திரம் விழுந்து விட்டது.

புத்தொளி என்ற அந்த இலச்சிய நண்பனின் மறைவு ஈடு செய்யமுடியாதது.

இலக்கியக் கூட்டங்களில் தமக்கே உரிய வெண்கலக் குரலில் அவர் பேசும் போது, நல்ல பல கருத்துக்களைக் கூறுவார். எல்லா எழுத்தாளர்களைப் பற்றியும் அறிந்து வைத்திருந்தார்.

எனக்கு நடந்த எல்லாப் பாராட்டு விழாக்களிலும் அவர் கலந்துகொண்டு பாராட்டுரைகள் நிகழ்த்தியது 'என் மனத்தில் அழியாமல் இருக்கிறது.

யாழ். இலக்கிய வட்டத்தின் பொருளாளராக இருந்து அவர் ஆற்றிய சேவைகள் மறக்கமுடியாதவை.

நல்ல நண்பர், நல்ல எழுத்தாளர், நல்ல சமூக சேவகர். நா.சிவபாதம் ஜே.பி என்ற பெயரில் அவருடைய ஊர் - அவரை நன்றியோடு நினைவுகூரும்.

'புத்தொளி' என்ற பெயரில் ஈழத்து இலக்கிய உலகில் என்றென்றும் அவர் நினைவுகூரப்படுவார்.



\- வரதர்

# பிலிப்பைன்ஸ் வெள்ளப்பெருக்கினால் 500 பேர் பலி; 150 பேரை காணவில்லை!

**பிலிப்பைன்ஸின் கிழக்குப் பகுதியில் வீசிய கடும் புயல் காற்றுடன் கூடிய மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவுகளில் சிக்கி 500 பேர் உயிரிழந்ததுடன் 150 பேர் காணாமற் போயுள்ளனர்.**

**கடந்த 48 மணித்தியாலங்களாக பிலிப்பைன்ஸின் இன்பன்ரா, றியல் மற்றும் மணிலா ஆகிய நகரங்களில் புயலுடன் கூடிய மழை பெய்ததால் போக்குவரத்துக்கள், அனைத்தும் தடைப் பட்டுள்ளதுடன் தொலைத் தொடர்பு வசதிகள், மின்சாரம் ஆகியன முற்றாகத் துண் டிக்கப்பட்டுள் ளன.**



இந்த வாரத்தில் ஒன்றன் பின் ஒன்றாக மூன்று தடவை புயற் காற்றுகள் தாக்கியதாலே இப்பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரத்தின் ஆரம்பத்தில் வீசிய இரண்டு புயற்காற்று மற்றும் பலத்த மழையினால் 160 பேர் ஏற்கனவே உயிரிழந்தனர்.

இந்த நிலையில் கடந்த 48 மணிநேரமாகப் பெய்துவரும் கடும் மழை மற்றும் புயல் காரணமாக பல்லாயிரக்கணக்கானோர் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

பாரிய மரங்கள் அனைத்தும் புயற்காற்றினால் வேருடன் சாய்ந்துள்ளன. அத்துடன், பெரும்பாலான வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன.

கார்கள் மற்றும் வாகனங்கள் ஆங்காங்கே தூக்கி வீசப்பட்டுக் கிடப்பதாகவும், சில வாகனங்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பட்டுள்ளதாகவும் - பெரும்பாலான மக்கள் மண் சரிவுகளில் அகப்பட்டு இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள பிலிப்பைன்ஸ் இராணுவத்தினர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். வெள்ளப் பெருக்கினால் போக்குவரத்துப் பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்து நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக ஹெலிகொப்ரர்களைப் பயன்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பிலிப்பைன்ஸ் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குக் கால் நடையாகவே சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு உணவு, குடிநீர், மருந்துப் பொருட்கள் மற்றும் உடுபுடவைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள பிலிப்பைன்ஸ் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் பீற்றோ கபூஜ, இராணுவத்தினர் மண்சரிவுகளில் சிக்குண்டவர்களை மீட்பதற்காக மண்ணைக் கையால் அகற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த 1991 ஆம் ஆண்டு பிலிப்பைன்சில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்கால் 5000 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுதங்களுடன் ஆகாஷ் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதனை




(புதுடெல்கி)

இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கழக வரலாற்றில் முதல் முறையாக ஆயுதம் தாங்கிய ஆகாஷ் ஏவுகணை விண்ணில் செலுத்தப்பட்டு வெற்றிகரமாக இலக்கைத் தாக்கிச் சோதனை செய்யப்பட்டுள்ளது.

ஒரிசா மாநிலம் பாலாசூர் அருகே உள்ளது சந்திப்பூர். இங்கு இந்தியப் பாதுகாப்புத் துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கழகம் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. விமானி இல்லாத போர் விமானம் லக்ஷயா மற்றும் பல ஏவுகணைகள் இங்குள்ள கடற்கரைப் பகுதியில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டு வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டு வருகிறன்றன.

அதன் அடிப்படையில் நேற்றுக்காலை ஆகாஷ் ஏவுகணை சோதனை நடந்தது முதலில் காலை 11.32 மணிக்கு விமானி இல்லாத போர் விமானம் லக்ஷயா விண்ணில் செலுத்தப்பட்டது. அதன் பிறகு 60 கிலோ வெடிமருந்து கொண்ட ஆயுதம் தாங்கிய ஆகாஷ் ஏவுகணை 11.37 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது. நடுவானில் லக்ஷயா விமானம் வெளியிட்ட இலக்கைச் சரியாகத் தாக்கியது ஆகாஷ் ஏவுகணை.

இந்தியப் பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கழக வரலாற்றில் ஆயுதம் தாங்கிய ஏவுகணை விண்ணில் செலுத்தப்பட்டு வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது இதுவே முதல்முறை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். நடுத்தர ஏவுகணையான ஆகாஷ் தரையிலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டு அதன் பிறகு இலக்கைச் சரியாகத் தாக்கியது. இது இந்தியப் பாதுகாப்புத்துறையின் ஆராய்ச்சியில் ஒரு மைல்கல் என்று ஹைதராபாத்தைச் சேர்ந்த ஆராய்ச்சி மையத்தின் திட்ட இயக்குனர் பிரகலாதா தெரிவித்தார்.

# இந்தோனேஷிய விமான விபத்தில் 32 பயணிகள் பலி 40 பேர் காயம்



இந்தோனேஷியாவில் பயணிகள் விமானமொன்று தரையிறங்கும்போது விபத்துக்குள்ளானதில் 32 பேர் பலியானதுடன் 40 பேர்வரை படுகாயமடைந்தனர்.

எ.என்.எம்.டி-82 என்ற பயணிகள் விமானமே விமான ஓடு தளத்தில் தரையிறங்க முற்பட்ட வேளை விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தோனேஷியாவில் கடந்த சில நாட்களாகக் காற்றுடன் கடும் மழை பெய்து வருகின்றது. இந்த நிலையில் குறித்த விமானத்தை விமானி தரையிறக்க முற்பட்டவேளை விமானத்தின் வாற்பகுதி பலமான காற்றினால் தாக்கப்பட்டதாகவும் இதனால் விமானி உரிய முறையில் விமானத்தைத் தரையிறக்கமுடியாத காரணத்தால் விமானம் கட்டுப்பாட்டை இழந்து விமானநிலையத்திற்கருகிலுள்ள மயானப் பகுதிக்குள் விபத்துக்குள்ளானதாக விமான நிலையப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த விமானத்தில் 140 பயணிகள் பயணம் செய்ததாகவும் இதில் விமானி உதவியாளர் மற்றும் திருத்துனர் உட்பட 32 பேர் பலியானதுடன் 40 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மற்றவர்கள் அனைவரும் மீட்பு பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளனர். விபத்துக்குள்ளான இந்த விமானம் சிங்கப்பூர், வியட்னாம், மலேசியா உட்பட 40 வழித்தடங்களில் சேவையாற்றி வந்தமை குறிப்பித்தக்கது.

# பலஸ்தீன தேர்தலை பகிஷ்கரிக்குமாறு ஹமாஸ், ஆதரவாளர்களிடம் கோரிக்கை

பலஸ்தீனத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு தனது ஆதரவாளர்களை ஹமாஸ் அமைப்பு கோரியுள்ளது.

இது தொடர்பாக ஹமாஸ் அமைப்பின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான இஸ்மாயில் ஹனியா காஸாவில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்ததாவது -

அடுத்த மாதம் 9 ஆம் திகதி பலஸ்தீனத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஹமாஸ் அமைப்பு தனது வேட்பாளரை நிறுத்தவில்லை. அத்துடன் சாதாரண பலஸ்தீனர்களுக்கு இது பொருந்தாது.

ஹமாஸின் இந்த அறிவிப்பை ஆதரவாளர்கள் அனைவரும் ஏற்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இவரது இந்த அறிவிப்பானது உத்தியோகபூர்வமாக ஹமாஸ் தனது வேட்பாளரை நிறுத்தவில்லையென்ற அறிவிப்பென செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் ஒஸ்லோ பிரகடனத்தின்படி பலஸ்தீனத்தில் ஆட்சி அதிகாரமொன்று அமைவதை



ஹமாஸ் விரும்பவில்லை என்பதையே அவர்களது இந்தப் பகிஷ்கரிப்பு எடுத்துக்காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் சீனப் பிரதமரை சந்தித்துப் பேச்சு!

ஆசியக் கண்டத்தின் தென் கிழக்கு நாடுகள் 'ஆசியன்' என்ற அமைப்பை உருவாக்கியிருக்கின்றன. இந்த அமைப்பின் மூன்று நாள் மாநாடு லாவோசில் உள்ள வியன்டின் நகரில் நடைபெற்று வருகிறது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள லாவோஸ் சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் சீனப் பிரதமர் ஜியாபோவும் வியன்டின் நகரில் சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்துப் பேச்சு நடத்தினர்.

'சிக்கிம்' இந்தியாவின் ஒரு பகுதி என்பதை சீனா ஏற்றுக் கொள்ள வேண்டும் என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளித்த சீனப பிரதமர் ஜியாயோ - இதை ஏற்றுக் கொள்கிறோம். படிப்படியாக இதற்கான நடைமுறைகளைக் கடைப் பிடிப்போம். இதை நாங்கள் எதிர்க்க வில்லை எனத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினையை உடனடியாகப் பேசித்தீர்க்க முடியாது. படிப்படியாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம் என இரு நாட்டுப் பிரதமர்களும் கருத்துத் தெரிவித்தனர்.

இருவரும் கைகுலுக்கிக்கொண்ட போது, "நாம் சமாதானமாகக் கை குலுக்கும் காட்சியை உலகமே ஆவலுடன் காண்கிறது" என சீனப் பிரதமர் புன்னகையுடன் கூறினார்.

தனது நாட்டுக்கு வருமாறு இந்தியப் பிரமர் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்ட சீனப் பிரதமர், எதிர்வரும் மார்ச் மாதம் வருவதாக உறுதியளித்தார்.

இரு நாட்டு தலைவர்களுக்கிடையிலான பேச்சுக்கள் சுமார் 40 நிமிட நேரம் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் - இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங், தேசிய பாதுகாபபு ஆலோசகர் கே.என். டிக்ஷிற் மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சீனப் பிரதமர் ஜியாபோவுடன் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் லி-ஜியோ-ஜிங், நிதியமைச்சர் ஜின்-ரெனிங், வர்த்தக அமைச்சர் போ-ஸ்லாய் மற்றும் அதிகாரிகள் பேச்சு வார்த்தையில் பங்குகொண்டனர்.

இரு நாட்டு பிரதமர்களின் சந்திப்புப் பற்றி இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்ஷிற் நிருபர்களிடம் கூறியதாவது -

இந்தியப் பிரதமரும், சீனப் பிரதமரும், இருநாட்டு எல்லைப் பிரச்சினை பொருளாதாரம், வர்த்தகம் குறித்துப் பேசினார்கள். தற்போது ஆண்டுக்கு ரூபா 1000 கோடியாக இருந்துவரும் வர்த்தகத்தை 10 ஆயிரம் கோடியாக உயர்த்துவது பற்றியும் கலந்துரையாடல் நடைபெற்றது.

திபெத் பற்றி சீனா எந்த பிரச்சினையையும் கிளப்பவில்லை. திபெத் தலைவர் தலாய்லாமா, இந்தியா வந்துசெல்வதற்கு சீனா எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

சீனப் பிரதமர் இந்தியா வரும் முன், சீன அதிகாரிகள் குழுவினர் டெல்கி வந்து பேச்சு நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

சீனா - இந்தியா இடையே 99.9 சதவீத நல்லுறவு நீடிக்கிறது. இன்னும் உள்ள 0.1 சதவீதத்தையும் பேச்சுவார்த்தை மூலம் நிறைவு செய்து விடுவோம். இரு நாடுகள் இடையே உள்ள சிக்கலான எல்லைப் பிரச்சினையையும் படிப்படியாக பேசித் தீர்த்துக்கொள்வோம்.

எல்லைப் பிரச்சினையை சுமுகமாக தீர்த்துக்கொள்ள, இரு நாட்டு வெளியுறவுத் துறை அதிகாரிகளும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இவ் வாறு டிக்ஷிற் கூறினார்.



அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எதிராக கனடாவின் ஒட்டாவா நகரில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் நடந்தது. ஜோர்ஜ் புஷ்ஷின் கனடா வருகையை ஒட்டி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தீவிரவாதிகளுக்கு எதிரான போர் என்ற வகையில் அமெரிக்கா மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதையும் நவீன அணு ஆயுதங்களை தயாரிப்பதை எதிர்ப்பதையும் எதிர்த்து கனேடிய நாடாளுமன்றம் அருகே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் புஷ்போல் முகமூடி அணிந்து ஒரு போலி ஏவுகணையை சுமந்துவந்த காட்சி.

# ஆப்கானில் காணாமற்போன அமெரிக்க விமானத்தின் சிதைவுகள், உடல்கள் மீட்பு

ஆப்கானில் காணாமற்போன அமெரிக்க இராணுவ விமானத்தின் சிதைவுகளையும், அதில் பயணஞ்செய்த அறுவரின் உடல்களையும் மீட்புப் பணியாளர்கள் மீட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானின் பமியான் மாகாணத்திக் மலைப்பகுதியிலிருந்தே விழுந்த விமானத்தின் சிதைவுகளும், உயிரிழந்த விமான ஓட்டிகள் மூவரதும், அமெரிக்க இராணுவ வீரர்களின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளரான மேஜர் ஜெனரல் மார்க் மக்னன் தெரிவித்தார்.

இந்த விமான விபத்து இடம்பெற்ற மலையின் உயரம் 16,600 அடியெனவும், இதிலிருந்தே விமானத்தின் இயந்திரம் மற்றும் சிதைவடைந்த பிற பாகங்களும் மீட்கப்பட்டுள்ளதாக பமியான் மாகாணத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான குலாம் மொகமட் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருமலை வன்முறைகளை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை!

## ஐ.தே.க குற்றச்சாட்டு

(திருகோணமலை)

திருகோணமலை மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் கடந்த சில நாட்களாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அரசாங்கம் தடுக்க முயற்சிக்காததையிட்டு அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதாக, ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இதுவரை நடைபெற்ற சம்பிரதாயமானதும், வருடத்தின் நவம்பர் 26, 27 ஆகிய தினங்களில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வன்முறைகள் ஏற்படலாம் எனக் கருதப்பட்ட இடங்களில் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கும் பொறுப்பை பாதுகாப்புப் படைகளிடமும், பொலிஸாரிடம் ஒப்படைத்திருத்தல் வேண்டும்.

ஆனால், இந்த இடங்களுக்கான பாதுகாப்பை படைகளிடம் ஒப்படைக்காததுடன், அரசாங்கத்தின் ஒரு பிரிவினர் இந்தச் சம்பவங்களில் தலையிட்டமை தெளிவாகின்றது.

திருகோணமலையிலும், அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் இடம்பெற்ற வன்முறைகள் சரியான வகையில் தீர்க்கக்கூடியதாக இருந்தது. இனவாத உணர்வுகளை ஊட்டி தம்மிடமிருந்து வேறுபடும் மக்களிடம் வெறும் வீரவசனங்களைக் கூறி ஜே.வி.பி ஆரம்பித்த வன்முறைகள் படையினருடன் மோதும் அளவுக்கு உயர்ந்தது.

படையினரும், பொலிஸாரும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இயலாமல்போனது. அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டதனாலாகும்.

இதனால் திருகோணமலை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் சாதாரண இயல்புவாழ்க்கை தடைப்பட்டு மக்கள் மீளவும் பாதுகாப்பற்ற நிலைமைக்கு ஆளாகினர். சமாதானத்தின் ஒளியைக் கண்டு கொண்டிருக்கும் நேரத்தில் துக்கமான நிகழ்வுகள் இடம்பெற்றமை வருந்தக்கூடிய விடயமாகும்.

இந்தப் பிரதேசத்தில் மக்களின் சொத்தழிவுகள் தொடர்வதை உடன் நிறுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியிடமும், ஜே.வி.பியினரிடமும் ஐக்கிய தேசியக் கட்சி வேண்டிக் கொள்கின்றதென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# குருநகர் மோதல்களைத் தணிக்க ஆயர் இல்ல சந்திப்பில் இணக்கம்

திருநகர் மற்றும் குருநகர்ப் பகுதி இளைஞர் குழுக்களிடையே இடம்பெற்றுவரும் மோதல்களை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் நேற்று ஆயர் இல்லத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது இரு தரப்பு பிரதிநிதிகள், பங்குத்தந்தை நிக்கலஸ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.எஸ்.வானகுரு, 51 ஆவது டிவிசன் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் லோறஸ் பெர்ணான்டோ, கேணல் உடவத்த ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது இரு குழுக்களும் மோதல்களில் ஈடுபடுவதில்லை என இணக்கம் காணப்பட்டுள்ளதுடன், வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டோரை நீதிமன்றில் ஆஜர்செய்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் பிரதேசங்களில் தொடர்ந்தும் படையினரும், பொலிஸாரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## பிந்துனுவெவ கொலை வழக்கில்

# மரணதண்டனைக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

பிந்துனுவெவ தடுப்புமுகாம் தமிழ் இளைஞர்கள் படுகொலை வழக்கில் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்ட நால்வரினதும் மேன்முறையீட்டு மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை ஒத்திவைத்துள்ளது.

பிந்துனுவெவ முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட நால்வருக்கு எதிராகத்தாக்கல் செய்யப்பட்ட 83 குற்றச்சாட்டுகளின் கீழ் கொழும்பு மேல்நீதிமன்ற ட்ரயல் அட்பார் நீதிபதிகளான சரத் அம்பேப்பிட்டிய, எரிக் பஸநாயக்க, உபாலி அபயரட்ண ஆகியோர் இவர்களுக்கு மரணதண்டனை தீர்ப்பளித்தனர்.

இவ்வாறு தீர்ப்பு அளிக்கப்பட்டவர்களில் மூவர் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவில், தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை என்றும் -

தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எதிராக தாம் தாக்கல்செய்த ஆதார ஆவணங்கள் தொடர்பாக மேல் நீதிமன்றம் கூடிய கரிசனை செலுத்தவில்லை என்றும் -

ஆகவே, மேல் நீதிமன்றம் தமக்கு எதிராகச் சுமத்திய குற்றச்சாட்டுக்களையும் வழங்கிய தீர்ப்பையும் நீக்கி தம்மை விடுதலை செய்யுமாறும் கோரப்பட்டிருந்தது.

இவர்களது மனுவைப் பரிசீலனை செய்த உயர் நீதிமன்ற நீதிவான்களான ரி.பி.வீரசூரிய, நிகால் ஜெயசிங்க, என்.கே. உடலகம, என்.ஈ.திஸநாயக்க, ராஜா பெர்னான்டோ ஆகியோர் எதிரிகளுக்கு எதிரான மேல் நீதிமன்றின் தீர்ப்பு தொடர்பான தமது முடிவை ஒத்திவைத்துள்ளனர்.

எதிரிகளான சேனக ஜயம்பதி கருணாசேன, டி.பி.சேப்பால திஸநாயக்க, எம்.ஏ.சாமி, ஆர்.எம்.பிரேமானந்த ஆகியோரே மேல் நீதிமன்றால் மரண தண்டனை தீர்ப்பு அளிக்கப்பட்டவர்கள் ஆவர்.

இவர்களில் டி.பி.சேப்பால திஸநாயக்க, எம்.ஏ.சாமி, ஆர்.எம். பிரேமானந்த ஆகியோர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான ரங்சித் பெர்னாண்டோ, டி.எஸ்.விஜயசிங்க மற்றும் ரின்ஸி அரசகுலரட்ண ஆகியோர் ஆஜராகினர். சட்டமா அதிபர் சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் ஸி.ஆர்.டி.சில்வா ஆஜரானார்.

## புலிகளுக்கு இடைக்கால...

இவற்றின் பின்னணியில் ஜே.வி.பியின் இந்த அறிவிப்பு அமைதி முயற்சிகளுக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபு நாட்டைப் பிளவுபடுத்தும் ஆவணம். பிரிவினையை ஏற்படுத்தும் ஆவணம். அதனை சபையில் வாக்கெடுப்புக்கு விடலாம். பிரச்சினையில்லை. ஆனால் அதை அமுல்படுத்த அரசு முற்படுமேயானால் தெற்கில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலைமை உருவாகும்.

அப்படியொரு நிலை உருவானால் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே பொறுப்பேற்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நிபந்தனையையும் அவர்களின் பிரிவினைவாத அரசியலையும் ஏற்றுக்கொள்ள மக்கள் தயாரில்லை. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபை முன்வைப்பதற்கு புலிகளுக்கு எவ்வளவு உரிமையுள்ளதோ அதை எதிர்ப்பதற்கு அதே அளவு உரிமை எமக்கு உள்ளது.

நாங்கள் தமிழ் மக்களுக்கு என்றுமே எதிரிகளில்லை. அவர்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார நெருக்கடிகளை நாம் உணர்கிறோம்.

அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உண்மையான எந்தக் கட்சியுடனும், எந்த அமைப்புடனும் பேச்சு நடத்த நாம் தயார்.

ஆனால், தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் யார் என்ற கேள்வி எம்முன் இன்று எழுந்துள்ளது என ஜே.வி.பி மேலும் தெரிவித்துள்ளது.

## சிறிமானி அத்துலத்...

கணவரும் முன்னாள் அமைசசருமான லலித் அத்துலத்முதலி சுட்டுக்கொல்லப்பட்டபின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஊடாக அரசியலில் புகுந்து -1994 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்குத தெரிவாகி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் போக்குவரத்து சூழலியல் மற்றும் பெண்கள் விவகார அமைச்சராகப் பதவி வகித்தார்.

1998 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அமைச்சுப்பதவியை இழந்த அவர் தொடர்ந்தும் 2000 ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

லலித் அத்துலத் முதலி உள்ளிட்டோரால் உருவாக்கப்பட்டு சிறிது காலத்தில் பிரபல்யம் அடைந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இரண்டாகப் பிளவுபட்டபோது லலித் பிரிவின் தலைவராகவும் இவர் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை

மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## வாள்வெட்டுக்கு

ரல் எம்.ரூபசிங்க என்ற சிப்பாயே நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

இந்தச சம்பவத்தில் காயமுற்ற இன்னொரு சிப்பாய் தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். இவர்கள் இருவரும் இலகு காலாற்படையின் 3 ஆவது பட்டாலியனைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது. (01)

## மோட்டார்...

தண்ணீா விநியோகக் கம்பத்துடன் தலை அடிபட்டு இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். விபத்துக்குள்ளான வாகனங்கள் பொலிஸாரால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (48)

## புலிகளுடன்...

நிலையைப் பேண அரசாங்கம் முயற்சிக்கின்றது.

வடக்கு - கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திகளை முன்னிறுத்தி இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராகவிருக்கின்றது. இது நோர்வே தரப்பு ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயில் 5.12.2002 இல் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட இணக்கத்திற்கு அமைய இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் தயாராகவிருக்கின்றது.

எனினும், விடுதலைப் புலிகளின் தலைவர் நிபந்தனையற்ற பேச்சுக்கு வருமாறு தமது மாவீரர் தின உரையில் கூறியிருப்பது அச்சமூட்டும் பாணியில் அமைந்துள்ளது.

அவர் ஒரு நிகழ்ச்சியை மாத்திரம் மையமாக வைத்துக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்திருப்பது மறைமுகமாக நிபந்தனைகளை விதித்துள்ளதாக அரசு கருதுகின்றது. அந்த நிபந்தனையானது உண்மையான பேச்சுவார்த்தைக்கு பாதகமாக அமைந்துள்ளது.

2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்ததையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகளை மக்கள் நன்கு அறிவார்கள். இந்த நிலையில் நோர்வே தரப்புடன் அரசு தொடர்ந்தும் இணைந்து செயற்பட்டு வருகிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பு செயலாளராக அசோக ஜெயவர்த்தன

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன நேற்று பதவியேற்றார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பதவிவகித்துவந்த சிறில் ஹேரத் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்தே இவரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜனாதிபதி சந்திரிகா நியமித்திருந்தார்.

மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனவுக்கு பாதுகாப்பு அமைச்சில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

# மரண அறிவித்தல்

### ஜெயபாலன் கஜேந்திரன்

குளத்தடி சங்கரத்தையைச் சேர்ந்த ஜெயபாலன்- கஜேந்திரன் நேற்று அகால மரணமானார். அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12 மணியளவில் வழுக்கியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ஜெயபாலன்
(இ) (தந்தை)



### மார்க்கண்டு பாலசுந்தரம்

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பாலசுந்தரம் 30.11.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு - மாணிக்கம் தம்பதிகளின் மகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் சுஜிலா (லண்டன்), சுஜிலன், லஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருபாகரனின் (லண்டன்) மாமனாரும் அபிராவின் பேரனும் சிவானந்தம், மகேஸ்வரி (லண்டன்), சிவநாதன் நிர்மலாதேவி (இந்தியா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய் (சி/3415)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.



### நமசிவாயம் சிவபாதம்
(புத்தொளி மாஸ்ரர்)

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் - சிவபாதம் (இளைப்பாறிய அதிபர், சமாதான நீதவான், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினர்) அவர்கள் (30-11-2004) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - திலகவதி ஆகியோரின் மருமகனும் ருக்குமணிதேவியின் அன்புக் கணவரும் சிவலோகநாதன் (பிரான்ஸ்), சித்திராதேவி, சித்திரலேகா (கனடா), சிவதனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகைபாகன், மோகனச்சந்திரன் (கனடா), யோகேஸ்வரி (பிரான்ஸ்), பாமினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கேசவி, கேதுசன், ஆர்த்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (02-12-2004) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 11-00 (பழைய நேரம்) மணிக்கு காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.ருக்குமணிதேவி
(மனைவி)

'செல்வ அகம்', ஆனைக்கோட்டை (சி/3416)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.